# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



# செய்திகள்

## குழந்தைகள் தினம்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் நவம்பர் 14-ஆம் தேதி மாலை நேரு ஜயந்தியைக் கொண்டாடினார்கள். குழந்தைகளையும் பெரியவர்களையும் சங்கத் தலைவர் ஸ்ரீ அழ. வள்ளியப்பா வரவேற்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த கண்ணன் ஆசிரியர் ஸ்ரீ ஆர்வி நேருஜிக்குக் குழந்தைகள் என்றாலே ஒரு தனிப் பிரியம் என்றும் வருங் காலப் பிரஜைகளான குழந்தைகள் நல்ல முறையில், நல்ல குணங் களுடன் உருவாக வேண்டும் என்பதே அவருடைய ஆசை என்றும் கூறினார். குழந்தைகள் என்றால் குதூகலப்படும் நேருஜியின் பிறந்த நாளைக் குழந்தைகள் கொண்டாடுவது மிகப் பொருத்தமே என்றும் அவர் கூறினார். 'நேருஜி ஒருவரால்தான் இன்று குழந்தைகள் விஷயத்தில் நாட்டில் ஒருவித அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அந்த அக்கறையை ஒரு பாஷணை மட்டும் கொள்ளாமல் உண்மையான சிரத்தையோடு நல்ல வழி காட்ட சர்க்கார் முன் வரவேண்டும்' என்றார் அவர்.

கொத்தமங்கலம் ஸ்ரீ எஸ், விசுவநாதன் நேருவின் சரிதையைப் பாடல்களுடன் விளக்கிக் கதைபோலக் கூறினார். பின்னர் குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. அடையாறு சிறுவர் சங்கத்தார் நடத்திய வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் சைதாப்பேட்டை பாரதி கலைக் கழகத்தார் நடத்திய குமணன் நாடகமும் குறிப்பிடத்தக்கவை. ஸ்ரீ தம்பி ஸ்ரீநிவாஸன் நன்றி கூறி, குழந்தைகளுக்கு மிட்டாய்கள் வழங்கினார்.

## இந்தியாவில் ரஷ்யத் தலைவர்கள்

இந்த நவம்பர் மாதம் வந்தாலும் வந்தது. இந்தியாவே ரகளைப் பட்டுக்கொண்டிருக்கிறது. நாட்டு மக்கள் உற்சாகத்தினால் திணறியே போய்விட்டார்கள். தீபாவளியும் நேரு ஜயந்தியும் முதல் நாள் மறு நாள் வந்தன. நாடெங்கும் ஒரே கொண்டாட்டம். பிறகு நேபாள மன்னர் இந்தியாவுக்கு வந்து பல நகரங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டுப் போனார். அவர் சென்னைக்கு விஜயம் செய்துபோன மறுநாள் ருஷ்யப் பிரதமர் புல்கானினும் ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி குருஷ் செவ்வும் விஜயம் செய்தனர். சென்னை நகரமே அவர்களைப் பார்க்கத் திரண்டுவிட்டது. அவர்கள் இருவரும் தென்னாட்டுக்கு வந்து இளநீர் சாப்பிட்டதும், வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டதும், குங்குமப் பொட்டு அணிந்து, காந்திக் குல்லாய் தரித்துக்கொண்டதும், கையெடுத்துக் கும்பிட்டதும், நமக்கெல்லாம் ஆச்சரியமாகவும் ஆனந்த மாகவும் இருந்தன. கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் சென்னைக் குழந்தை கள் அவர்களுக்கு ஓர் உற்சாகமான வரவேற்புக் கொடுத்தார்கள். அடுத்தபடியாக இந்தியாவுக்கு ஸவூதி அரேபிய மன்னர் வந்திருக்கிறார். அவரும் சென்னைக்கு விஜயம் செய்யலாம்.

## சென்னையின் புதிய மேயர்

சென்னையின் புது மேயராக ஸ்ரீ வி. ஆர். ராமநாத ஐயர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். உதவி மேயராக டாக்டர் சுவாமி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

## இந்தியா-நியூஜிலாந்து கிரிக்கெட் மாட்சு

இந்தியாவுக்கும் நியூஸிலந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையே ஹைதராபாத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் மாட்சு டிராவாக முடிந்தது. அடுத்த மாட்சு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி பம்பாயில் நடைபெறும். குலாம் அகமதுதான் இந்தியக் கட்சியின் காப்டனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

# கண்ணன்



## பொருளடக்கம்


**மலர்: 6 இதழ்: 23**

**1 - 12 - '55**



| | |
|---|---|
| குழந்தைகளே! | பக்கம் 2 |
| நிருபர் பகுதி | .. 3 |
| குண்டுச் சீமா | .. 5 |
| லக்ஷ்மி | .. 10 |
| நட்சத்திரப் பாவாடை | .. 13 |
| கடன்பட்ட நெஞ்சம் | .. 18 |
| கெண்டை மீன் | .. 22 |
| ஞாபகமறதி | .. 27 |
| சேற்றில் பொன் | .. 31 |
| பாலர் கவி அரங்கம் | .. 36 |
| லீடர் மணி | .. 37 |
| செய்திகள் - 2 - அட்டை | |
| அதிருஷ்ட எண்கள் - 3 - அட்டை | |


வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## 15 - 10 - 55

## அதிருஷ்ட எண்கள்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு ரூ.15/- | .. | 8187 |
| 2-ஆம் பரிசு ரூ.10/- | .. | 5137 |
| 3-ஆம் பரிசு | 1. .. | 13052 |
| (தலா) ரூ. 5/- | 2. .. | 9024 |
| | 3. .. | 7828 |
| 4-ஆம் பரிசு | 1. .. | 65 |
| (தலா) ரூ. 2/- | 2. .. | 6665 |
| | 3. .. | 2259 |
| | 4. .. | 11122 |
| | 5. .. | 5757 |

அக்டோபர் 15-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். டிசம்பர் மாதம் 15-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்குமேல் அனுப்பினால் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.


கண்ணன் - சென்னை ஏஜெண்டு:

நேரு நியூஸ் ஏஜென்ஸி, லஸ், சென்னை-4.

# குழந்தைகளே!

கண்ணன் நேயர்களாகிய உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். எதற்கு நன்றி என்றுதானே பார்க்கிறீர்கள்? இருங்கள்; சொல்கிறேன்.

கண்ணன் தீபாவளி மலரை உச்சி குளிரப் பாராட்டி, வானளாவப் புகழ்ந்து, அப்படியும் உங்கள் ஆசை தீராமல் ஆயிரக்கணக்கில் கடிதம் எழுதிக் குவித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டாமா? ஒவ்வொருவருக்கும் நான் தனியே பதில் எழுதவில்லை. காரணம்; முடியவில்லை. எத்தனை என்றுதான் நான் கையொடிய எழுதுவேன்? அப்பப்பா!

குழந்தைகள் மட்டுமா? எத்தனை பெரியவர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறை நிபுணர்கள், இலக்கிய கர்த்தாக்கள் எல்லாரும் பாராட்டினார்கள்! எனக்கு, உண்மையை ரகசியமாகச் சொல்கிறேனே, அப்படியே மனசு பூரித்து வெடித்துவிடும்போல இருக்கிறது. போதுமா?

அடுத்தபடியாக நீங்கள் எல்லாரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி இங்கே தெரிவிக்கப்போகிறேன். அது என்ன தெரியுமா? தொடர்கதைப் போட்டியின் முடிவுதான்.

'மஞ்சள் பங்களா' என்ற தொடர் கதைதான் முதல் பரிசுக்குரியதென்று பஞ்சாயத்தார்கள் ஏகமனதாக முடிவு செய்திருக்கிறார்கள். இதை எழுதிய இளம் நண்பர் ஜி. ஜயராமன் என்பவர். இவர் ஏற்கனவே கண்ணன் கதைப் போட்டியில்கூட முதல் பரிசு பெற்றிருக்கிறார். இவருடைய முழு விலாசம்: 4 போரூர் தெரு. தாம்பரம். இவருடைய வெற்றி குறித்து உங்கள் சார்பாக என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த இரண்டாவது பரிசுக்குரிய தொடர்கதை திருவத்திபுரம் மண. அரங்கசாமி என்ற குழந்தை எழுத்தாளர் எழுதிய 'எல்லாம் நன்மைக்கே' என்பதாகும். இவருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரசுரத்துக்கு உரியதென்று பாராட்டுப் பெற்ற மூன்றாவது கதையை எழுதியவர் ஓர் இளம் பெண்மணி; தமிழ் நாட்டிலிருந்து ஹைதராபாத்தில் போய் வசிப்பவர். பெயர் ஜோதிர்லதா கிரிஜா. கிரிஜாவின் கதைகள் உங்களுக்குப் புதிதல்ல, எத்தனையோ கதைகளைப் பல பத்திரிகைகளுக்கும் எழுதிப் பெயர் பெற்ற பெண். அவருக்கும் நம் பாராட்டுதல்கள்.

'மஞ்சள் ப்ங்களா' புதிய வருஷத் தொடக்கத்திலிருந்து கண்ணனில் ஆரம்பமாகும். அதனோடு பொங்கல் இதழிலிருந்து எல்லாம் நன்மைக்கே என்ற கதையும் வேறு கவர்ச்சியான தலைப்புடன் கண்ணனில் ஆரம்பமாகும்.

ஜோதிர்லதா கிரிஜா எழுதிய கதை கண்ணன் வெளியீடாக விரைவில் வெளிவரும்.

இந்தப் போட்டிக்கு எண்பத்தாறு கதைகள் வந்தன. அவற்றை எழுதிய எல்லாக் குழந்தை எழுத்தாளருக்கும் என் நன்றியையும் ஆசியையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னோடுகூட இந்தக் கதைகளைப் பொறுமையுடன் நிதானமாகப் படித்துப் பரிசீலித்து, பட்சபாதமற்ற முறையில் எடை போட்டுச் சீர்தூக்கி முடிவு கூறியவர்கள் வருமாறு:

ஸ்ரீ த. நா. ஸேனாபதி, உதவி ஆசிரியர், மஞ்சரி, சென்னை.

ஸ்ரீ எஸ். நீலமேகம், உதவி ஆசிரியர், சுதேசமித்திரன், சென்னை.

ஸ்ரீ கி. தாமோதரன் (கலையாழி), கலைமகள், சென்னை.

இவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

—ஆசிரியர்.

# கன்னியா குமரி

211799

★

இந்தியாவின் கோடியான கன்னியாகுமரியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலால் நாங்கள் பத்துப் பேர் அடங்கிய ஒரு குழுவினர் கன்னி முனைக்குப் புறப்பட்டோம். கன்னியாகுமரி நாகர்கோயிலிலிருந்து பத்து மைல். பஸ்ஸில் இயற்கைக் காட்சிகளை அநுபவித்தவாறே சென்றுகொண் டிருந்தபோது மாலை நேரமாகிவிட்டது.

கன்னி முனையில் சூரிய உதயமும், சூரிய அஸ்தமனமும் கடலினுள் நிகழும். மாலை நேரத்தில் சூரியன் கடலுக்குள் மறையும் காட்சியைக் கண்டு ரசித்துக்கொண்டே இந்து மஹாசமுத்திரத்தின் அலைகளோடு போட்டியிட்டோம்.

மறுநாள் காலையில் சென்று சூரிய உதயத்தையும் பார்த்தோம். பிறகு மூன்று கடல்கள் சேருமிடத்தில் நடுங்கிக்கொண்டே (குளிராலோ, பயத்தாலோ) குளித்தோம்.

கடலுக்குள் சற்றுத் தூரத்தில் விவேகானந்தர் பாறை என்னும் ஒரு பாறை உள்ளது. அங்கேதான் விவேகானந்தர் தவம் செய்தாராம். சில சமயங்களில் இந்து மஹாசமுத்திரத்தின் அலைகள் பாறையோடு கண்ணு மூச்சி விளையாடின. அங்கே நாங்கள் விதம் விதமான மணலைப் பொட்டலங்களாக மடித்துக் கொண்டோம்.

மலையாள நாட்டில் கோயிலுக்குள் செல்லும்போது சட்டை போடக்கூடாது. அந்தப் பழக்கம் கன்னியாகுமரியின் கோயிலிலும் இருக்கிறது. கன்னியாகுமரி அம்மனை வணங்கி, கோயிலிலிருந்து வெளி வந்து ஒரு மேடான இடத்தில் அமர்ந்து மூன்று பெரிய கடல்களின் அழகையும் ரசித்தோம்.

கன்னி முனைக்குப் பக்கத்திலுள்ள பெரிய நகரம் திருவனந்தபுரம். மிருகக்காட்சிச் சாலை, மியூஸியம், நட்சத்திர பங்களா, விமான நிலையம், ஸ்டுடியோ, அரசர் மாளிகை, ரேடியோ ஸ்டேஷன் போன்ற கண்ணுக்கு விருந்து அளிக்கக்கூடியவை அநேகம் அங்கே உள்ளன.

முதலில் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று பூர்வ பரம்பரையினரை (குரங்குகளை)ப் பார்த்தோம். புலி, சிங்கம், ஒட்டகம், யானை போன்ற பலவித மிருகங்களையும் பார்த்தோம். பிறகு ஒவ்வொன்றாகச் சுற்றிப் பார்த்துக்கொண்டு கடற்கரையின் எழிலைக் கண்டு களித்தோம்.

★



கடலில் சூரிய உதயம்



குமரியில் ஸ்நான கட்டம்



விவேகானந்தர் தவம்செய்த பாறை



அரபிக் கடலில் சூரிய அஸ்தமனம்

வரும் வழியில் குற்றாலம் அருவியில் குளித்து, மலைமீதுள்ள பாபநாசம். (அப்பர் டாம்) மேலணைக்கு விஜயம் செய்தோம். மேலணைக்கட்டு மூன்று மலைகளுக்கு இடையே மூன்று ஆறுகளுக்குக் கட்டப்பட்டுள்ள ஒரு பெரிய அணை. இரவு அந்தப் பக்கங்களில் புலி நடமாட்டமும் உண்டாம். அங்கே புகைப்படம் எடுக்கக் கூடாது. கீழணைக்கட்டோடு இணைக்கப்பட்ட பாபநாசம் மின்சார நிலையத்தையும் பார்த்தோம். ஒரு நல்ல அதிகாரியால் உள்ளே போக வாய்ப்புக் கிடைத்தது. பெரும் சத்தத்துடன் உருண்டுகொண்டிருக்கும் பெரிய டைனமோக்களைக் கீழ் அறைகளில் வைத்திருக்கிறார்கள். அவைகளைத் தரையிலிருந்த கண்ணாடி வழியாகப் பார்த்தோம்.

மின்சார நிலையத்திலிருந்து வெளிப்படும் தண்ணீர் பெரிய ஆறு போல் செல்லுகிறது. திருச்சி, மதுரை, தஞ்சாவூர், ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கும் இங்கிருந்தே மின்சாரம் அளிக்கப்படுகிறது. கண்ட காட்சிகளை வியந்துகொண்டே ஊர் வந்து சேர்ந்தோம்.

—S. P. ஸ்ரீநிவாஸன்,
மேலைச்சிவபுரி.

★

# குண்டுச் சீமா



## ராஜி

### 16

கீதாவின் பள்ளிக்கூடத்தில் விடுமுறைக்கு முன் வருஷாந்தரக் கொண்டாட்டம் நடத்துவது உண்டு. அப்போது போட்டிப் பந்தயங்களும் வேறு விதமான வேடிக்கைகள் முதலியனவும் நடக்கும். வழக்கம் போல அந்த வருஷமும் விநோத ஆடைப் போட்டியும் நடக்க இருந்தது. இந்தக் கொண்டாட்டத்திற்குத் தன் மாமாவையும் அழைத்துப் போகவேண்டும் என்று கீதாவுக்கு ஆசை உண்டாயிற்று. அவள் சாமா மாமாவிடம் சென்று, ''மாமா, நீங்கள் இன்னிக்குச் சாயங்காலம் என் பள்ளிக்கூடத்தில் நடக்கப் போகும் கொண்டாட்டத்திற்குக் கட்டாயம் வரணும். வீட்டிலே எல்லாருக்கும் அழைப்பு வந்திருக்கு'' என்றாள்.

சாமா மாமா, ''எனக்கு வேலை இருக்கு. நான் வரல்லை அம்மா'' என்றார். உடனே கீதாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்ன மாமா இது, நான் கூப்பிட்டா வர மாட்டேங்கிறே? சீமா அண்ணா கூப்பிட்டா மாத்திரம் அவன் பள்ளிக்கூடத்திலே போய் மாஜிக் பாத்துட்டு வரலாமா? என் பள்ளிக்கூடத்திலே இன்று மாலை நடக்கப் போகும் 'பான்ஸி டிரஸ்' போட்டி ரொம்ப நன்றாக இருக்கும். அதிலே பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்கள் எல்லாம் கலந்து கொள்வார்கள்'' என்றாள்.

உடனே சாமா மாமா, ''இந்தக் 'காம்பெடிஷன்' எங்கள் பையன்கள் பள்ளிக்கூடத்திலும் உண்டு. அதில் கலந்து கொள்பவர்கள் வித விதமாக மாறு வேஷத்துடன் அந்தந்த வேஷத்துக்குப் பொருத்தமான ஆடைகளை அணிந்துகொண்டு வருவார்களே. அதைத்தானே சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

''ஆமாம் ஆமாம். ரொம்ப நன்னா இருக்கும். வா மாமா'' என்று கூப்பிட்டாள் கீதா.

''இந்தப் போட்டியிலே பெரிய மனுஷாள் வீட்டுப் பெண்களுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள். இருந்தாலும் நானும் சீமாவை அழைச்சிண்டு வறேன்'' என்று ஒப்புக்கொண்டார் மாமா.

கீதாவின் பள்ளிக்கூடத்திலே சரியான கூட்டம். எல்லா விதமான போட்டிகளும் நடந்தன. கடைசியில், 'பான்ஸி டிரஸ் காம்பெடிஷன்' ஆரம்பமாயிற்று. மாறு வேடம் தரித்த பெண்கள் கியூ வரிசையில் நின்றார்கள். ஒரு பெண் கிருஷ்ணன் வேஷம் போட்டுக் கொண்டிருந்தாள். மற்றொருத்தி செம்படவன் வேஷம்; வேறு ஒருத்தி பாம்பாட்டி வேஷம்; ஒரு பெண் உண்மையான ஆங்கிலேயப் பெண்மணி மாதிரி இருந்தாள். ஒரு பெண் குடு குடுப்பாண்டி வேஷம் அணிந்துகொண்டிருந்தாள். இம்மாதிரியாகப் பல பெண்கள் பல வேஷம் போட்டுக்

கொண்டு நின்றுகொண் டிருந்தார்கள். ஆனால் அந்தக் கியூ வரிசையில் கடைசியாகக் குறத்தி வேஷம் போட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்த பெண்ணைப்பற்றித்தான் எங்கும் பேச்சாக இருந்தது. அந்தப் பெண் போட்டுக்கொண்டிருந்த பாசிமணி மாலை, அழுக்குப் படிந்த பாவாடை, சட்டை, எண்ணெயே படாமல் உள்ள தலைமயிர், கையிலே தகரக் குவளை, அந்தப் பெண்ணின் பேச்சு, நடை, யாவும் உண்மையான குறத்தியைப் போலவே தோற்றமளித்தன. கியூ வரிசையில் நின்றுகொண் டிருந்தவர்கள் ஒவ்வொருவராக மேடை மீது ஏறி நின்றார்கள். யாருக்கு நல்ல வேஷப் பொருத்தம் என்று தேர்ந்தெடுக்க மூன்று பெரிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பெண்ணையும் ஏதாவது கேள்வி கேட்டுவிட்டு மேடையை விட்டு இறங்கச் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

கியூ வரிசையில் குறத்தி வேஷம் அணிந்துகொண் டிருந்த பெண் மாத்திரம் சற்றுக் கூச்சத்தினால் தயங்கித் தயங்கி மேடைக்குப் போகாமல் நின்றுகொண்டிருந்தாள். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அந்தப் பெண்ணுக்குத் தைரியம் கூறி, ''ஏன் பெண்ணே, பயப்படறே? உனக்கு வேஷப் பொருத்தம் மிகவும் நன்றாக இருக்கிறது. உனக்குத்தான் கட்டாயம் பரிசு கிடைக்கும். தைரியமாக மேடைக்குப் போய் நில்லு'' என்றார்கள். குறத்தி வேஷப் பெண்ணும் தைரியமாக மேடைக்குச் சென்றாள். அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் அங்கே தேர்ந்தெடுப்பதற்காக உட்கார்ந்திருந்த மூன்று உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். ''எங்கே, ஒரு பாட்டுப் பாடு அம்மா'' என்று அவர்கள் சொன்னதுதான் தாமதம்; கையிலுள்ள தகரக் குவளையில் கைகளினால் தாளம் போட்டுக்கொண்டே குறத்தியைப்போலச் சினிமாப் பாட்டு ஒன்றைப் பாடி மேடையைச் சுற்றி வந்தாள். பாட்டு முடிந்தவுடன் சபையில் பலத்த கரகோஷம் ஏற்பட்டது. அங்கே இருந்த மூன்று உத்தியோகஸ்தர்களும் அவளுக்குத்தான் முதல் பரிசு கொடுப்பது என்று தீர்மானித்தார்கள். உடனே அந்தக் குறத்தி வேஷம் அணிந்திருந்த பெண்ணைக் கூப்பிட்டு, ''உன் பெயர் என்ன? நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்? உன் வீட்டின் விலாசம் என்ன?'' என்று கேட்டார்கள்.

''எனக்கு வீடு ஏதுங்க, சாமி? நாங்க எங்கேயாச்சியும் ஒரு மரத்தடியில் படுப்போம். எனக்குப் பேரு ஒண்ணும் கிடையாதுங்க. அதோ அங்கிருக்கிற ஐயாக்காரரெல்லாம் மேடைக்குப் போகச் சொன்னாங்க. நான் வந்தேன்'' என்று சொல்லிக்கொண் டிருக்கும் பொழுதே ஒரு பெரிய குறத்தி கோபமாக அங்கே வந்தாள். ''இங்கே என்ன பண்றே? உன்னை எங்கெல்லாம் தேடறது? இங்கே வேடிக்கை பாக்கவா இப்போ நேரம்? வா!'' என்று அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டே போய்விட்டாள். அப்பொழுதுதான் அங்கிருந்தவர்கள் எல்லாருக்கும் அந்தப் பெண் வேஷம் தரித்த குறத்தி அல்ல என்றும் உண்மையாகவே அவள் குறத்தி என்றும் தெரியவந்தது. இந்த வேடிக்கையான சம்பவத்தைப்பற்றிச் சாமா மாமா வீட்டுக்கு வந்ததும் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லிச் சிரித்தார். ''நான் மாத்திரம் அந்த மூன்று உத்தியோகஸ்தர்களில் ஒருவராக இருந்திருந்தால் அந்தக் குறத்தியின் தைரியத்தை மெச்சி அவளுக்குப் பரிசு கொடுத்திருப்பேன்'' என்றார்.

## 17

சாமா மாமா ஊருக்குப் போக வேணும் என்று சொன்னார். ஆனால் எல்லாரும், 'தீபாவளி கழிச்சுப் போகலாம்' என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்கள். கடைசியில் அம்மாமியையும் குழந்தைகளையும் எங்கள் வீட்டுக்கே தீபாவளிக்கு வரவழைத்துவிட்டோம்.

தீபாவளி நெருங்கிற்று. தீபாவளி வந்துவிட்டது என்றுலே எங்கள் பாட்டி, தாத்தா, அம்மா எல்லோரும் என்னைப்பற்றிக் கவலை கொள்வார்கள். தீபாவளிக்கு இரண்டு நாள் முன்பே வழக்கம்போல என் சிநேகிதன் வைத்தி, லக்ஷ்மணன், கிட்டா, சங்கரன் எல்லோரும் என் வீட்டில் கூடினுர்கள். அவ்வளவுதான், என் மாமா அவர்களையே கவனித்துக்கொண்டிருந்தார். பிறகு அவருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ''ஏ சீமா, வருஷா வருஷம் நீ வெங்காய வெடிகளை யெல்லாம் பண்ணிண்டு வரேன்னு பாட்டி சொல்ரு. எனக்குத் தெரிஞ்சு எத்தனையோ பையன்களுக்கு, வெங்காய வெடி பண்ணும்போதே வெடித்து, கை கால்கள் எல்லாம் சேதமாயிருக்கு. சில பையன்கள் இறந்துகூடப் போயிருக்கிருர்கள்'' என்ருர். வெங்காய வெடிகள் பண்ணப் போகிறேம் என்பது எங்க மாமாவுக்குத் தெரிந்திருக்குமோ என்று யோசனை செய்தேன். நானும் மற்றச் சிநேகிதர்களும் கலந்து யோசனை செய்தோம். ''அடே வைத்தி, மாமா கூடாதுன்னு ரொம்ப கண்டிப்பா சொன்னுர். அப்படி இருக்கும் போது, எதுக்குடா வெங்காய வெடிகள் செய்யணும்?'' என்று கேட்டேன் நான். உடனே வைத்தியும் கிட்டாவும், ''அட போடா பயந்தாங்கொள்ளி. அவருக்குத் தெரியாமல் பண்ணினுல் போச்சு. நாளைக்குக் கார்த்தாலேதான் உங் கப்பாவும் மாமாவும் எங்கேயோ வெளியே போகப்போருன்னு சொன்னியே. அவர்கள் வெளியே போயிட்டு வரத்துக்குள்ளே எல்லோரும் சேர்ந்து செய்துட்டால் போறது. உங்காத்துத் தோட்டத்திலேயே மறைவாச் செய்துடலாம்'' என்ருர்கள். 'சரி' என்று நானும் ஒப்புக்கொண்டேன்.

மறுநாள் காலை மாமாவும் அப்பாவும் அவசரமாக வெளியே புறப்பட்டு போனுர்கள். ''நாங்கள் சாயங்காலம்தான் திரும்பி வருவோம்'' என்று போகும்போது என் பாட்டியிடம் சொன்னுர் அப்பா. எனக்கும் என் சிநேகிதர்களுக்கும் ரொம்பச் சந்தோஷம். வைத்தியும் கிட்டாவும் மருந்தை மாவுபோல அறைப்பதில் முனைந்திருந்தார்கள். சங்கர் கந்தல்துணிகளையும் கூழாங்கற்களையும் ஒவ்வொரு வெங்காய வெடிக்கு எவ்வளவு வேண்டுமோ, அவைகளைத் தனித்தனியாக எடுத்து வைத்துக்



கொண் டிருந்தான். இவைகள் எல்லாம் தோட்டத்தின் கோடியில் ஒரு மூலையில் மறைவாகச் செய்து கொண்டிருந்தோம்.

ஒரு வழியாக வெங்காய வெடிகளை யெல்லாம் செய்து முடித்தோம். 'அப்பாடி' என்று நான் பெருமூச்சுவிட்டு, ''வைத்தி எத்தனை வெடிகள் இருக்கும்?'' என்று கேட்டேன். உடனே அவன் வெடிகளை எண்ணி, ''ஐம்பது வெடிகள் இருக்கும்!'' என்றான். நான் கிட்டாவைக் கூப்பிட்டு, ''கிட்டா, இதோ இந்தத் துணிப்பையிலே எல்லா வெடிகளையும் ஜாக்கிரதையாகப் போட்டு, உங்க வீட்டிலே கொண்டுபோய்வை. அப்புறம் நாம் எல்லோரும் சேர்ந்து அங்கேயே வெடிக்கலாம்'' என்றேன். இதற்குள் மணி நான்கு அடித்தது.

உடனே வைத்தி, ''கிட்டா நீ வாசல் பக்கமாகப் போகாதே. சீமாவின் பாட்டி, தாத்தா, அம்மா யாராவது பார்த்துடப் போறா.. கொல்லைப் பக்கமே போ'' என்றான். பெருமூச்சு விட்டுக்கொண்டே, ''அடே சீமா, உங்க மாமாவும் அப்பாவும் தோட்டப் பக்கமாகத் தான் வந்திண்டிருக்கா. இத்தனை நாழி தோட்டக் கதவண்டையே வந்திருப்பா. அவா என்னையும் என் பையையும் பாத்துட்டாடா. அதனால் திரும்பி வந்துவிட்டேன்'' என்றான் கிட்டா.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பயத்தினால் உடம்பெல்லாம் ஜில்லென்று ஆயிற்று. நாக்குப் பேச முடியாமல் உள்ளிழுத்தது. ''சீக்கிரம் போய் எங்கேயாவது ஒளித்துவை. பிறகு எடுத்துக் கொள்ளலாம்'' என்றேன். அவன் தோட்டத்தில் உட்காருவதற்காக உள்ள திண்ணையின் அடியில் வைக்கப் போனான். ''அடே அடே, அங்கே வைக்காதே. அந்தத் திண்ணையில்தான் மாமா வந்ததும் உட்காருவார்!'' என்று சொன்னேன். பாவம், பயத்தினால் நடுங்கிக்கொண் டிருந்த கிட்டா, பையை எடுத்துக்கொண்டு வேறு இடத்தில் வைக்கப் போனான். அந்தச் சமயத்திலே எங்கப்பாவும் மாமாவும் தோட்டத்து உள்ளே நுழைந்து வந்தார்கள். உடனே சாமா மாமா, ''ஏண்டா சீமா, தோட்டத்திலே எல்லோருடனும் என்ன பண்றே?.......'' என்று சொல்லி முடிப்பதற்குள், ''அதெல்லாம் ஒன்றுமில்லை மாமா. எல்லோரும் ஏதோ வேடிக்கையாகப் பேசிக்கொண் டிருக்கோம்'' என்று சொன்னேன். ''அப்பாடா, சிரமமாய் இருக்கு'' என்று சொல்லிவிட்டு மாமா ஒரு விசிறியைக் கையில் வைத்துக்கொண்டு தோட்டத்தில் இருந்த திண்ணையில் உட்கார்ந்தார். அப்பா உள்ளே போய்விட்டார். மாமா எழுந்திருந்து எப்போது உள்பக்கம் போவார் என்று அவரையே நாங்கள் பார்த்துக்கொண் டிருந்தோம்.

அந்தச் சமயத்தில் என் பாட்டி வேலைக்காரியைக் கூப்பிட்டு, ''உரலை எல்லாம் சுத்தம் செய்துவிட்டாயா?'' என்று கேட்டாள். ''செய்துட்டேன், அம்மா'' என்று அவளிடமிருந்து பதில் வந்தது. ''சீக்கிரம் இந்த மருந்துச் சாமானை இடிச்சுண்டு வா'' என்றாள். உடனே வேலைக்காரி அவசர அவசரமாக மருந்துச் சாமானை உரலிலே போட்டாள். உலக்கையினால் மருந்துச் சாமானை ஒரு முறை குத்தினாள். அவ்வளவுதான். ஒரே சமயத்தில் பல அதிர்வேட்டுகள் வெடிப்பதுபோல் ஒரு பலத்த சப்தம் உரலிருந்து உண்டாயிற்று. ஒன்றும் புரியாத வேலைக்காரி திடுக்கிட்டு உலக்கையைக் கீழே போட்டு விட்டு அலறியடித்துக் கொண்டு ஓடினாள். அந்தச் சப்தத்தினால் என் வீடே அதிர்ந்தது. மாடியிலிருந்து ''என்ன என்ன?'' என்று அப்பா ஓடி வந்தார். சமையலறையிலிருந்து அம்மா, பாட்டி, கூடத்திலிருந்து தாத்தா எல்லோரும் ஓடி வந்தார்கள். சாமா மாமா சற்று நிதானமாக உரல் அருகில் சென்று பார்த்தார். விஷயம் புரிந்துவிட்டது. ''நீ உன் சிநேகிதர்களுடன் ஏதாவது விஷமம் பண்ணப் போகிறாயே என்று எண்ணித்தான் தோட்டப் பக்கமாக வந்தேன். நான் எதைச் செய்யவேண்டாம் என்று சொன்னேனோ அதைச் செய்திருக்கிறாய்.



நல்ல வேளையாக இன்று வேலைக்காரி உயிர் தப்பினாள். அவள் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டிருந்தால் என்ன ஆயிருக்கும்?'' என்று கேட்டவுடனே என்னை அறியாமல் என் கண்களிலிருந்து கண்ணீர் வந்துவிட்டது. நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். கண்டித்துவிட்டு அவரும் உள்ளே போய் விட்டார். உடனே நான் கிட்டாவைக் கூப்பிட்டு, ''ஏண்டா போயும் போயும் உரலிலேயா வெங்காய வெடிகளை ஒளித்து வைப்பது?'' என்றேன். உடனே கோபமாக, ''எல்லாம் சொல்லுவேடா. அந்தச் சமயத்தில் என்ன பண்ணுவதென்றே புரியல்லே. அப்போதுதான் உரலைச் சுத்தம் செய்துட்டு வேலைக்காரி போவதைப் பார்த்தேன். அதிலே மறைத்து வைத்துவிட்டு உங்க மாமா, உள்ளே போனப்புறம் எடுத்துக் கொள்ளலாம்னு நினைச்சேன். உங்க மாமா தோட்டத்திலேயே உட்காருவார்னு 'யாருடா நினைச்சா? அவர் உட்கார்ந்தால்தான் என்ன? வேலைக்காரி உரலிலே உடனே மருந்து இடிப்பாள்னு யாருக்குடா தெரியும்? நம்ம செஞ்சது கடவுளுக்கே பொறுக்கலே. இனிமே இந்த வெங்காய வெடிகிட்டேயே நாம் ஒத்தரும் போகக் கூடாது'' என்று சொன்னான். பிறகு எல்லோரும் அவரவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

தீபாவளிக்கு இரண்டு நாள் முன்பாகவே எனக்கும், சீதாவுக்கும் சாமா மாமாவே கடைக்குப் போய் வெடிகளும் வாணங்களும் நிறைய வாங்கிக் கொடுத்தார். நான் வெடிகளையும் வாணங்களையும் ஜாக்கிரதையாக உபயோகித்தேன். அவரும் பக்கத்தில் நின்று கவனித்துக்கொண்டிருந்தார்.

# லக்ஷ்மி

## கி. ரா.

தூங்கி எழுந்ததுமே அன்று லக்ஷ்மிக்கு மனது என்னவோ போலிருந்தது. எழுந்தவுடன் வழக்கம்போல் தோட்டத்துக்கு ஓடினுள்.

காலை இள வெயிலில் துள்ளித் துள்ளி விளையாடிக்கொண் டிருந்தது கௌரி.

''ஓஹோ! பால் குடிச்சாச்சா! அதுதான் அவ்வளவு ஆனந்தமோ!'' என்று தள்ளாடித் தள்ளாடி அதைப் பிடிக்க ஓடினுள் லக்ஷ்மி. அவள் கிட்ட நெருங்கும் வரையில் காத்திருந்து விட்டு அவள் சமீபத்ததும் தாவிக் குதித்தது கௌரி. அதற்கும் லக்ஷ்மியைக் கண்டால் அளவு கடந்த உற்சாகம்.

குழந்தை லக்ஷ்மிக்கு ஐந்து வயதுகூட நிரம்பவில்லை. அவளுடைய பால் வடியும் முகமும் வட்டமான இரு விழிகளும் யாருடைய மனத்தையும் கவர்ந்துவிடும். அவளுடைய இணை பிரியாத விளையாட்டுத் தோழி கௌரி; பசுங் கன்று. பசு வீட்டுக்கு வந்து ஒரு மாதங்கூட ஆகவில்லை. லக்ஷ்மியும் கௌரியும் ஒருவருடன் ஒருவர் பல நாள் பழகிய தோழர்கள் போல் ஒட்டி விட்டார்கள். அதற்குக் 'கௌரி' என்ற பெயரை லக்ஷ்மிதான் சூட்டினுள். தன்னுடைய பூப் போன்ற கரங்களைக் குவித்து அதன் முகத்தை எடுத்து வைத்துக்கொண்டு, 'கௌரி - தங்கம்!' என்று அவள் கொஞ்சும் அழகைப் பார்க்க வேண்டுமே!

கௌரிக்குப் பேசத்தான் தெரியாது. மற்றப்படி அவளுக்கு மேல் அதுவும் கொஞ்சும். அவளுடைய கால்களை நாக்கினுல் வருடும்; திடீரென்று துள்ளிக்கொண்டு ஓடும். லக்ஷ்மி தொடர்ந்து வருகிருளா என்று நின்று திரும்பிப் பார்க்கும். அவள் வரவில்லை யென்ருல் மறுபடியும் அவளுடைய காலை நககும். அதைப் பார்த்தால், ''என்னுடன் விளையாட வா!'' என்று கூப்பிடுவதைப் போல் இருக்கும்.

எப்போதும் லக்ஷ்மியைக் கௌரியின் பக்கத்தில்தான் காணலாம். சாப்பிடும்போதுகூட அம்மா கிண்ணத்தில் சாதத்தைப் பிசைந்து அங்கேதான் கொண்டுவந்து கொடுப்பாள். இல்லையென்ருல் சாப்பிடும் இடத்தில், வீட்டுக்கு உள்ளே கௌரி பக்கத்தில் நிற்கும்.

அதைப் பார்த்து, ''இந்தா, சாதம் வேணுமா?'' என்பாள் லக்ஷ்மி. அது சும்மா தலையை அசைக்கும். ''இந்தா, இந்தா'' என்று அதனிடம் கொடுக்க நெருங்குவாள். அது சட்டென்று தன் தலையால் கையில் மோதி விட்டு ஓடிவிடும். அவ்வளவுதான்!

''ஓஹோ! திட்டறயோ! இதோ பார்!'' என்று சொல்லிக் கொண்டே லக்ஷ்மி துரத்தத் தொடங்கி விடுவாள்! சாப்பாடு அவ்வளவுதான்!

''கண்ணு! லக்ஷ்மி! இந்தா அம்மா!'' என்று அம்மாளும் கையில் கிண்ணத்துடன் தேடிச் செல்லவேண்டியதுதான்!

இன்று லக்ஷ்மியைத் தேடிக் கொண்டே வந்தாள் அவளுடைய அம்மா. தோட்டத்தில் வாழை மரத்தைச் சுற்றி லக்ஷ்மி ஓடிக் கொண்டிருந்தாள். அவளைத் துரத்தித் துரத்திப் பிடித்துக் கொண்டிருந்தது கௌரி. அதைப் பார்த்து அப்படியே பிரமித்து நின்ருள் அம்மா. வழக்கம்போல் கூப்பிடவில்லை.

''இனி புள்ளேதாங்க ரொம்பக் கஷ்டப்படும்'' என்ருள் அங்கே வந்த வேலைக்காரி. அம்மா மௌனமாகப் பார்த்துக் கொண்டே நின்ருள்.

''என்ன?'' என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தார் லக்ஷ்மியின் அப்பா.

''இதோ பாருங்கள்! குழந்தை எப்படி விளையாடுகிருள்! நாளைக்கு

என்ன செய்வாள் என்று நினைத்தேன். மனசுக்குக் கஷ்டமாயிருந்தது'' என்றாள் அம்மா.

''அதற்காக என்ன செய்கிறது? சுழி விழுந்த மாட்டை வைத்துக் கொள்ள முடியுமா? அது வந்ததிலிருந்து கையில் காலணா கிடையாது. கடையிலும் வியாபாரம் குறைந்துவிட்டது. தெரியாமலா பெரியவங்க சொல்லியிருக்காங்க, 'எளத்திச் சுழி மாடு நிதிக்குக் கேடு' என்று?'' என்றார் அப்பா.

''எப்போது வந்து மாட்டை ஓட்டிக்கொண்டு போகப் போகிறார்கள்?''

''இதோ இன்னும் அரை நாழிகைக்கு எல்லாம் வந்து விடுவார்கள்.''

''அப்போ சாயங்காலம் இருட்டின அப்புறம் வரச் சொல்லுங்களேன். இன்றைக்கு முழுவதுமாவது குழந்தை விளையாடட்டும்'' என்றாள் லக்ஷ்மியின் அம்மா. முதலில் அவள்தான் மாட்டை விற்று விடவேண்டும் என்ற யோசனையைக் கூறியது. இப்போது குழந்தை விளையாடுவதைக் கண்டதும் அவள் மனம் இளகி விட்டது.

''இதென்ன நீகூடக் குழந்தை



யைப் போல் பேசுகிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே லக்ஷ்மியின் அப்பா உள்ளே போய்விட்டார்.

சாயங்காலம் ஆறு மணியிருக்கும். விளக்கு வைக்கும் நேரம். பசுவையும் கன்றையும் ஓட்டிக் கொண்டு போய் விட்டார்கள். அப்போது லக்ஷ்மி வீட்டில் இல்லை. முன்னேற்பாடாக அவளை அம்மா கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டாள்.

கோவிலுக்குப் போய் விட்டு வரும் வழியில் லக்ஷ்மிக்கு அம்மா புஷ்பம் வாங்கிக் கொடுத்தாள். கை நிறைய 'சாக்லேட்' வாங்கிக் கொடுத்தாள்; அப்படியாவது குழந்தை கௌரியை மறந்துவிடுவாள் என்ற நோக்கத்தில்.

குழந்தைக்கு எப்படித்தான் தெரிந்ததோ! வீட்டுக்குள் நுழைந்ததுதான் தாமதம், லக்ஷ்மி தோட்டத்துக்குத்தான் ஓடினாள்.

''கௌரி! கௌரி! உனக்கு சாக்லேட் இந்தா!'' என்று கூவிக் கொண்டே ஓடினாள். அங்கே கௌரியைக் காணவில்லை. ''கௌரி....கௌரி!'' என்று கூவினாள். அங்கே கௌரி இருந்தால்தானே! தோட்டம் முழுவதும் தேடினாள். கௌரியையும் காணோம், அவளுடைய தாயையும் காணோம்.

''அம்மா!'' என்று அலறிக் கொண்டு குழந்தை உள்ளே ஓடி வந்தாள். அதற்குள் அம்மாவுக்கும் விஷயம் தெரிந்துவிட்டது.

''என்னடா கண்ணு!'' என்று அநுதாபத்துடன் வாரி அணைத்துக் கொண்டாள்.

''எங்கே அம்மா, கௌரி?''

''கௌரியும் அம்மாவும் மேயப் போயிருக்கிறது அம்மா. நாளைக்கு வந்து விடும்!''

''இல்லே, பொய்! கௌரி! கௌரி!'' என்று அழத் தொடங்கினாள் லக்ஷ்மி. அவள் கண்ணீர் மாலை மாலையாகக் கொட்டிற்று. கண்களைச் சுற்றி இட்டிருந்த மை கரைந்து கன்னங்களில் வழிந்தது.

''கௌரியைக் கொண்டா! கௌரியைக் கொண்டா!'' இதே தான் புலம்பல். தாய்க்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை.

அன்று இரவு குழந்தை சாப்பிடவில்லை. ஒரே விக்கல், விம்மல். அழுது அழுது முகம் வீங்கிவிட்டது.

இரவு வெகு நேரம் கழித்துத்தான் கண்ணயர்ந்தாள். அப்போதும் தூக்கத்தில் இடையிடையே விக்கல்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன. பிஞ்சு போன்ற அந்த இளம் நெஞ்சில் ஏற்பட்ட துக்கத்தை யார் அறிய முடியும்!

விடியற் காலம் ஐந்தரை மணிக்கு அடுப்பு மெழுகுவதற்குச் சாணம் கொண்டு வருவதற்காக லக்ஷ்மியின் அம்மாள் தோட்டத்துக்குப் போனாள். அங்கே கண்ட காட்சியைக் கண்டு பிரமித்துப் போய் நின்றுவிட்டாள். லக்ஷ்மி துள்ளி ஓடும் கௌரியை ஓடி ஓடிப் பிடித்துக்கொண்டிருந்தாள்! லக்ஷ்மி எப்போது எழுந்திருந்தாள்? கௌரி எப்போது எப்படி அங்கே வந்தது! அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே கற்சிலையைப் போல் நின்றாள் அம்மா. அவளுடைய கண்களில் கண்ணீர் துளித்தது.

''இதென்ன மோசமாயிருக்கிறது! கன்றுக்குட்டி தும்பை அறுத்துக்கொண்டு ஓடி வந்துவிட்டதாமே! அவர்கள் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டே வந்தார் லக்ஷ்மியின் அப்பா,

''அதற்கு இருக்கிற அறிவு கூட நமக்கு இல்லை. பேசாமல் அவர்களிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, பசுவையும் ஓட்டிக் கொண்டு வந்துவிடுங்கள்!'' என்றாள் லக்ஷ்மியின் அம்மா.

அப்பா பேசாமல் நின்றார். எதிரில் நடக்கும் லக்ஷ்மி - கௌரி விளையாட்டைப் பார்த்துக் கொண்டே நின்றார்.

# நட்சத்திரப் பாவாடை



ரா. ஆறுமுகம்

வெளித் திண்ணையில் நின்று கொண்டிருந்த சிறுமி சியாமளாவிடம் தபால்காரர் ஐந்தாறு கடிதங்களைக் கொடுத்து விட்டுச் சென்றார். அவைகளைக் கையில் வாங்கியதும் சந்தோஷத்தால் குதித்துக்கொண்டு உள்ளே ஓடி, ''அப்பா; அப்பா, உங்களுக்கு இன்றைக்கு நிறையக் கடிதம் வந்திருக்கு'' என்று தன் தந்தையிடம் கொடுத்தாள். தினசரிப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த அவளுடைய தந்தை சங்கரன், ''யாரெல்லாம் எழுதியிருக்கிறார்கள்?'' என்று விலாசத்தைப் பார்த்தார்.

'ஸ்ரீ சங்கரன் அவர்கள் மேல் பார்த்து சியாமளாவிடம் கொடுப்பது' என்று அவைகளில் இரண்டு கவர்கள் இருந்தன.

''அடடே, சியாமளா, இங்கே ஓடிவா. இதில் உனக்கு இரண்டு கடிதம் இருக்கு. இந்தா, பிரித்து யார் எழுதியிருக்கிறதென்று படி'' எனக் கொடுத்தார். ''எனக்கா ஆச்சரியமாயிருக்கே! எனக்கு யார் எழுதப்போறாங்க?'' என்று கேட்டுக்கொண்டே சியாமளா கடிதங்களை வாங்கி, பிரித்துப் பார்த்தாள்.

'அன்புள்ள சியாமளாவுக்கு, உன் மாமா எழுதியது. நான் இந்த வருஷம் தீபாவளிக்கு அங்கே வரச் சௌகரியப்படாது. உனக்கு என்ன வேண்டுமென்று எழுதினால் வாங்கி, தபாலில் பார்சல் செய்து அனுப்புகிறேன். உன் தாயாரையும் நான் விசாரித்ததாகச் சொல்லு.

உன் அன்புள்ள மாமா.

(பம்பாய்)'

''அப்பா, அப்பா, ஒரு கடிதம் மாமாவிடமிருந்து வந்திருக்கு. தீபாவளிக்கு எனக்கு என்ன வேண்டுமென்று கேட்டிருக்கார்'' என்றாள் சிரித்துக்கொண்டே.

''ஓஹோ, சரிதான். ஏன், அவன் இங்கே வரப் போவதில்லையாமா? ஆமாம், பம்பாயிலிருந்து வந்து போக வீண் செலவுதானே! இன்

னெரு கடிதம் யார் எழுதியிருக்கிறது?''

''இருங்க, அதையும் படிக்கிறேன்.

'அன்புமிக்க சியாமளா,

இந்த வருஷம் தீபாவளி சமயம் நான் உன்னுடன் இருக்க முடியாமல் இவ்வளவு தூரம் இருப்பதை நினைத்து வருத்தப்படுகிறேன். நாங்கள் இங்கே வந்து மூன்று மாதம் தானே ஆகிறது? அதற்குள் திரும்ப அங்கே வருவதென்ருல் செலவு ஆகுமென்று உன் அத்தான் சொல்கிருர். நானும் சரியென்று ஒப்புக்கொண்டுவிட்டேன். தீபாவளிப் பரிசாக உனக்கு ஏதாவது அனுப்ப வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். உனக்கு என்ன சாமான் வேண்டுமென்று உடனே தெரிவிக்கவும். நான் வரவில்லையே என்று கவலைப்பட வேண்டாமென அம்மாளிடம் சொல்லு.

உன் அக்காள்,
அம்புஜம்.
(டில்லி)'

''பேஷ், பேஷ். இந்த வருஷம் தீபாவளி உனக்குத்தான் விசேஷமாயிருக்கப்போகிறது சியாமளா. உனக்கு வேண்டிய சாமானைப் பற்றி அவர்கள் இரண்டு பேருக்கும் இன்றே எழுதிவிடு. ஏன்னு இன்னும் பத்து நாள்தானே இருக்கு பண்டிகைக்கு!'' என்ருர் அவள் தந்தை.

''இருங்க அப்பா, முதல்லே இந்தக் கடிதங்களை அம்மாவிடமும் காட்டிவிட்டு வர்றேன்'' என்று அவள் சொல்லிக்கொண்டே அடுப்பறைப் பக்கம் ஓடினுள்.

,சமையல் வேலையில் மும்முரமாக இருந்த அவள் தாயார், ''என்ன சியாமளா, ஏதோ கடிதம், கடிதமுன்னு பேசிக்கொண்டிருந்தீர்களே; யாரிடமிருந்து வந்திருக்கு?'' என்று கேட்டாள்.

''என் பேருக்கே இரண்டு கடிதம் வந்திருக்கு அம்மா. ஒன்று மாமாவிடமிருந்து. இன்னென்று அக்காவிடமிருந்து. இரண்டு பேரும் இந்தத் தீபாவளிக்கு இங்கே வர முடியாதாம். எனக்கு என்ன வேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள்'' என்ருள் சிரித்துக்கொண்டே சியாமளா.

''அட கஷ்டமே. அவுங்க இரண்டு பேரும் வருவாங்க என்றல்லவா நான் சந்தோஷமாயிருந்தேன். அப்படியானு இந்த வருஷம் நம்ம வீட்டுக்கு விருந்தாளிகளே யாருமில்லையா? சே, சே, விருந்தில்லாத விசேஷம் ஒரு விசேஷமா?'' என்று குறைப்பட்டுக்கொண்டாள் தாயார்.

''அக்காளும் மாமாவும் வராட்டா என்ன அம்மா? பாவம் அவங்க டில்லியிலேயிருந்தும் பம்பாயிலிருந்தும் வர எவ்வளவோ செலவாகுமே. தீபாவளி சமயத்திலே நம்ம வீட்டுக்கு எங்கிருந்தாவது விருந்து வந்திடும்மா'' என்று ஆறுதல் கூறினுள் சியாமளா.

''சியாமளா, இதோ உன் அண்ணன் சென்னையிலிருந்து கட்டாயம் தீபாவளிக்கு வர்றதாக எழுதியிருக்கிருன். உன் அம்மாவிடம் சொல்லு'' என்று சத்தம் போட்டுச் சொன்னுர் அவள் தந்தை.

''கேட்டாயா அம்மா. அண்ணு வரப்போருனும். உனக்கு இப்பச் சந்தோஷம்தானே?''

''சரி, சரி, நீ போய் உன் அப்பாவிடம் பேசிக்கொண்டிரு. எனக்கு அடுப்பு வேலை நிறையக் கிடக்கு'' என்று தாயார் தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டாள்.

சியாமளா மெதுவாகத் தன் தந்தையின் அருகில் போய் நின்ருள்.

''உன் அக்காவுக்கும் மாமாவுக்கும் என்ன எழுதப் போறே?'' என்று அவர் கேட்டார்.

''எனக்கு இரண்டு கார்டு கொடுங்க. அதிலே அவங்க விலாசமும் எழுதிக்கொடுங்க. நானே என் கைப்பட அவங்களுக்கு எழுதப்போறேன். உங்களிடமெல்லாம் காட்டவே மாட்டேன்.''

''இப்போதே தர்றேன். உடனே எழுதி நீயே தபாலிலே போட்டுவிடு. உனக்கு அவுங்க அனுப்பும்

சாமான் எப்படியும் எனக்குத் தெரியாமல் போகாது. ஆனால் ரொம்ப விலையுயர்ந்த சாமான்களைக் கேட்டு எழுதிவிடாதே. பாவம், அவங்களுக்குச் சிரமம் கொடுக்கக்கூடாது'' என்று யோசனை சொல்லி மேஜையிலிருந்து இரண்டு கார்டுகளை எடுத்து விலாசம் எழுதிக் கொடுத்தார்.

சியாமளா தனியாக ஓர் இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டு சிறிது நேரம் யோசித்துவிட்டு தனக்கு வேண்டிய ஒரே பொருளையே இரண்டுபேரும் வாங்கி யனுப்பும்படி கேட்டு எழுதினாள். கார்டுகளைத் தன் பெற்றோர்களிடம் காட்டாமல் அவளே கொண்டு போய்த் தெருக்கோடியிலிருந்த தபால் பெட்டியில் போட்டுவிட்டு வந்தாள்.

மூன்று நான்கு தினங்கள் கழித்து ஒவ்வொரு நாளும் தபால்காரரை எதிர்பார்த்துத் திண்ணையில் நின்றுகொண்டிருந்தாள். அதைக் கண்ட அவள் தாயார், ''ஏன் சியாமளா, இப்படிக் கால் கடுக்கத் தினமும் காத்துக்கொண்டிருக்கே? தபால்காரர் வந்தால் கூப்பிடமாட்டாரா?'' என்று கடிந்து கொண்டாள்.

''நான் அதுக்காக நிக்கலேம்மா. சும்மா வேடிக்கை பாத்துக்கிட்டிருக்கேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே வந்துவிட்டாள். தான் பள்ளிக்கூடம் சென்றிருக்கும் சமயம் பார்சல் வந்து வீட்டில் யாரும் பிரித்துப் பார்த்துவிடக் கூடாதே என்று அவள் கவலைப்பட்டாள்.

தீபாவளிக்கு மூன்று நாளிருக்கும்போது, டில்லியிலிருந்தும் பம்பாயிலிருந்தும் எதிர்பார்த்த பார்சல்கள் வந்துவிட்டன. பார்சல் வந்த சமயம் சியமளா வீட்டில் இல்லை. பள்ளிக்கூடம் போய்விட்டாள். அவளுடைய தந்தை பெயருக்கே வந்ததால் அவர் கையெழுத்துப்போட்டு வாங்கி வைத்தார். சியாமளாவின் தாயார் அதைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று விரும்பினாள். அவர்தான்,



'கூடாது, சியாமளா வந்து பார்க்கட்டும்' என்று கூறித் தடுத்து விட்டார்.

அன்று மாலை சியாமளா பள்ளியிலிருந்து வந்ததுமே, புத்தகப் பையை ஒரு மூலையில் தூக்கி எறிந்து விட்டு ஒரே பாய்ச்சலில் மேஜைக்குச் சென்று பார்த்தாள். அங்கே இரண்டு பார்சல்கள் அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தன. இரண்டு கைகளிலும் சேர்த்து எடுத்துக் கொண்டு, என்ன செய்வதென்று புரியாமல் இங்குமங்கும் ஓடினாள்.

''ஏன் சியாமளா, இப்படிக் குதிக்கிறாய்? ஒரு இடத்தில் உட்கார்ந்து அமைதியாகப் பிரித்துப் பார். நான் பிரித்துக் கொடுக்கட்டுமா?'' என்று கேட்டார் தந்தை.

''வேண்டாம் அப்பா. நானே பிரித்துக் கொள்கிறேன். எனக்குத் தெரியும்'' என்று சொல்லிவிட்டு, கீழே உட்கார்ந்து, ஒரு பார்சலைத் தன் காலுக்கடியில் வைத்துக் கொண்டு, மற்றொன்றை மடியில் வைத்தபடியே பிரிக்க ஆரம்பித்தாள். அவள் தாயாரும் பார்சலில் என்னதான் வந்திருக்கிறதென்று பார்க்க அங்கே வந்து நின்றாள். சியாமளாவின் தந்தையும் அவள் பக்கத்தில் வந்து நின்றார்.

''உங்களுக்கெல்லாம் காட்டமாட்டேன். நானேதான் பார்ப்பேன்'' என்று கொஞ்சினாள் சியாமளா.

''சும்மா பிரியம்மா. என்ன சாமான் நீ கேட்டாயென்று நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டாமா? பரவாயில்லை. எப்படியும் ஒரு நாள் நாங்கள் பார்த்துத் தானே தீருவோம்'' என்று தாஜா பண்ணினார் தந்தை.

''இருங்க, முதல்லே இது யாரிடமிருந்து வந்திருக்குன்னு பார்க்கிறேன்..ஓ, அக்காளிடமிருந்து..'' சியாமளாவினால் பார்சலைப் பிரிக்க முடியவில்லை.

''இங்கே கொடு அம்மா. நான் ஒழுங்காய்ப் பிரித்துத் தர்றேன். உள்ளே இருக்கும் சாமானைக் கெடுத்துவிடாதே'' என்று மறுபடியும் சொன்னார் தந்தை.

''சரி, இந்தாங்கப்பா. மேலே இருக்கும் துணியை மட்டும் பிரிச்சு அப்படியே என்னிடம் கொடுத்து விடணும். உள்ளேயிருக்கிறதை எடுத்துப் பார்க்கக்கூடாது'' என்ற நிபந்தனையோடு பார்சலைத் தந்தையிடம் கொடுத்தாள்.

அவரும் சிரித்துக்கொண்டே அதை வாங்கி, சிறு கத்தியினால் பார்சலைப் பிரித்து அவளிடமே திரும்பக் கொடுத்தார். அவள் உடனே அதை ஓர் அறைக்குள் எடுத்துக்கொண்டு ஓடி, உள்ளேயிருந்த பொருளை எடுத்துப் பார்த்தாள். ஒரு நீல நிறப்பட்டுப் பாவாடை. வானத்தின் வர்ணத்திலிருந்த அந்தப் பாவாடையின் உடல் முழுவதும் வெள்ளி நிறத்தில் அங்கங்கே வானத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நக்ஷத்திரம் போன்ற சித்திரம் அச்சடிக்கப்பட்டிருந்தது. சுருங்கச் சொன்னால், வானத்திலிருந்து ஒரு சிறு துண்டுத் துணியை வெட்டி அதைக்கொண்டு பாவாடை தைக்கப் பட்டிருந்தது எனலாம். அதே துணியில் ஒரு சட்டையுமிருந்தது.

அவைகளைப் பார்த்ததும் சியாமளாவுக்குக் கோபம் வந்துவிட்டது. கையில் எடுத்துக்கொண்டு வெளியே ஓடி வந்து, ''இந்தாங்க அப்பா, பாருங்க. இதுதான் அக்காள் அனுப்பியிருக்கிறது. எனக்கு இது வேண்டாம். திருப்பியனுப்பிடுங்க'' என்று அவர் கையில் கொடுத்துவிட்டாள்.

''அடி பைத்தியமே, நீலப்பட்டுப் பாவாடை. நல்லாத்தானே இருக்கு'' என்று கூறி அவைகளை அம்மா வாங்கிப் பார்த்தாள்.

''அப்பா, இந்தப் பார்சலைப் பிரிங்க. மாமா என்ன அனுப்பியிருக்கிறாரோ, பார்க்கலாம்!''

இரண்டாவது பார்சலும் பிரிக்கப்பட்டது. அதற்குள்ளிருந்த வெண்பட்டுப் பாவாடையை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள் சியாமளா. அவளுக்கு ஆனந்தம் பொங்கி வழிந்தது. பற்பல வர்ணங்களில் சினிமா நடிகர், நடிகை

களின் உருவப் படங்கள் சிறிது சிறிதாக அச்சிடபட்டிருந்தன. அதைப் போலவே ஒரு சட்டையும் இருந்தது. பாவாடையின் உயரம் சரியாயிருக்கிறதா என்று இடுப்பிலிருந்து தொங்கவிட்டுப் பார்த்தாள். சரியாக இருந்தது.

''பார்த்தீர்களா அப்பா! நான் கேட்டிருந்தது இந்தப் பாவாடைதான். மாமாவுக்குத்தான் என் பிரியம் நன்ருய்த் தெரிந்திருக்கிறது. அக்கா, சுத்த அபத்தம்'' என்று பார்சல் அனுப்பிய இருவர்களைப்பற்றியும் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

''நீ உன் கடிதாசியிலே என்ன எழுதியிருந்தே?'' அப்பா கேட்டார்.

''இரண்டு பேருக்குமே 'ஒரு நட்சத்திரப் பாவாடை தைச்சு அனுப்புங்க'ன்னு எழுதியிருந்தேன்.''

''சரிதான். நட்சத்திரமென்ருல் ஆகாயத்திலே இருக்கிற நட்சத்திரம்-வெள்ளி-அப்படின்னு உன் அக்கா அர்த்தம் செய்திருக்கிருள். அதனுலேதான், நீலவர்ணத்திலே நட்சத்திரம் போலவே வெள்ளிக் கலரிலே அச்சிட்ட துணி வாங்கித் தைச்சு அனுப்பியிருக்கிருள். அவள் பேரிலே தப்பு இல்லேயே'' என்று தன் மகளுக்குச் சிபாரிசாகப் பேசினுள் அம்மா. தன் மேல் தவறு என்பதைச் சியாமளா ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை அவள் முகம் காட்டியது.

''வாஸ்தவம்தானம்மா. நீ சினிமா நட்சத்திரங்களின் படம் போட்ட துணி என்று எழுதியிருக்கவேண்டும்'' என்று தகப்பனுரும் சொன்னுர்.

அப்போதுதான் சியாமளாவுக்குத் தன் தவறு தெரிந்தது. அக்காள் பேரில் கோபித்துக்கொள்ளக் கூடாது என்று உணர்ந்தாள்.

''மாமாவுக்கு மட்டும் எப்படி அர்த்தம் தெரிந்தது?'' என்று கேட்டாள் சியாமளா.

''அவர் உன் மனத்தை நன்ருய்த் தெரிந்திருக்கிருர். அதனுல்தான்,



போலீஸ்காரன்: கூப்பிடு உன் மகனே, கச்சேரிக்கு.

பட்டிக்காட்டான்: வரமாட்டேங்கிறவனே ஏன் சாமி தொந்தரவு பண்றே? நான் வறேன். பாட்டுன்னு உசிரு எனக்கு. சேரியிலே யாரு பாடறுங்க?

—கிரிஜா, ஹைதராபாத்.

---

நட்சத்திரப் பாவாடை என்றதும் சட்டெனப் புரிந்துகொண்டார் போலிருக்கிறது'' என்று விளக்கினுர் தந்தை.

''அதுமட்டுமல்ல-அவர் மகனுக்குத்தானே நம் சியாமளாவை பெரிய பெண் ஆனதும் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறோம்? அதனுல் இவளேத் திருப்தி செய்ய, இவள் இஷ்டம் என்னவாயிருக்குமென்று நன்ருய் யோசனைசெய்து வாங்கியனுப்பியிருக்கிருர்'' என்ருள் தாயார், குறும்பாகச் சிரித்துக்கொண்டே.

''போம்மா, அதையெல்லாம் சொல்லாதே. மாமா, ரொம்ப நல்லவர்'' என்று வெட்கத்தோடு இரண்டு பாவாடைகளேயும் சுருட்டி எடுத்துக்கொண்டு அறைக்குள் ஓடிவிட்டாள் சியாமளா. அதைக் கண்டு பெற்ருேர்கள் சிரித்தார்கள்!

# கடன்பட்ட நெஞ்சம்



ஜோதிர்லதா கிரிஜா

'கடன் பட்டவனுடைய நெஞ்சம் எப்படிக் கலங்குமோ, அப்படிக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று தமிழ்ப் பண்டிதர் கம்ப ராமாயணப் பாட்டு ஒன்றுக்குப் பொருள் சொல்லிக்கொண்டிருந்தார். கடன்பட்டு அதைத் தீர்க்க வகையில்லாது தவிக்கும் மனிதனது உள்ளம் என்ன பாடு படும் என்பதை வாத்தியார் விவரிக்க விவரிக்க ராமகிருஷ்ணனின் மனம் சகிக்க முடியாத வேதனைக்குள்ளாகியது. 'ஏன் இப்படிப் புத்தி போயிற்று நமக்கு?'

அடுத்த பாடம் சரித்திரம் நடந்தது. புத்தர் பிரானுடைய கொள்கைகளைப்பற்றி ஆசிரியர் விவரிக்கலானார். ''புத்தர், 'ஆசையே அழிவுக்குக் காரணம்' என்றார். அவர் புதிதாக ஒன்றையும் கண்டு பிடித்துச் சொல்லிவிடவில்லை. அழிவுக்கு மூல காரணம் ஆசைதான் என்ற மறுக்க முடியாத உண்மை யாவரும் அறிந்தது தான். எனினும் அந்த உண்மையை நடவடிக்கையில் கடைப் பிடித்துக் காட்டுபவர் யார்? ஒருவரும் இல்லை. பரந்து கிடக்கும் இந்த உலகில் ஆசையில்லாத மனிதன் கோடிக்கு ஒருவன் கூட இருக்க மாட்டான். முதலில் உதாரணத்துக்கு ஒரு சின்ன விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இப்போது நமது ராமகிருஷ்ணன்தான் இருக்கிறான். பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகிற வழியில் ஓட்டல் கண்ணாடி பீரோவில் அடுக்கி வைத்திருக்கும் தின்பண்டங்களைப் பார்க்கிறான். உடனே அவனுக்கு நாக்கில் தண்ணீர் ஊறுகிறது. நாவின் ஆசையை அடக்க அவனால் முடியவில்லை. கையிலோ காசு இல்லை. ஆசையும் தணிகிற வழியாயில்லை. எனவே உள்ளே நுழைந்து சாப்பிடுகிறான். ஓட்டல் முதலாளிக்கு அவன் அந்த ஊர்ப் பையன் என்பதும் இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான் என்பதும் தெரியும். எனவே மறுநாள் பணம் தருவதாக அவன் வாக்களித்ததை அவர் நம்புகிறார். ஆனால் மறுநாள் ராமகிருஷ்ணன் பள்ளிக்கூடத்துக்கு அந்த ஓட்டல் வழியாகப் போகவில்லை. குறுக்குவழியாகப் போகிறான். வீட்டை விட்டு எங்கே வெளியே கிளம்பினாலும் ஓட்டல்காரரின் கண்ணில் பட்டுவிடுவோமோ என்று பயம். இப்படியாக ஆசைக்கு அடிமைப் பட்டதன் விளைவாக அமைதி என்பதே அவனிடமிருந்து போய்விடுகிறது.''

இப்படி அவர் சொல்லிக் கொண்டே போனபொழுது ராம கிருஷ்ணனின் எண் சாண் உடம்பும் ஒரு சாணுய்க் குறுகியது. இருதயம் துடித்த துடிப்பு அவன் காதிலே விழுந்தது. தன்னைப்பற்றிய விஷயத்தை எப்படியோ தெரிந்து கொண்டுதான் அவர் கதை சொல்கிறமாதிரி தன்னைக் குத்திக் காட்டுகிருர் என்று தெள்ளத் தெளிவாய் அவனுக்குத் தெரிந்தது. அவன் முகத்தில் அசடு ஆருய் வழிய வாத்தியாரைப் பார்த்துத் திருதிருவென்று விழித்தான். அவனுடைய மனக் கலத்தை ஊகித்து விட்டவர் போல், வாத்தியார் அவனைப் பார்த்து லேசாய் நகைத்த வண்ணம், ''ராமகிருஷ்ணு! நீ ஏன் மிரள மிரளத் திருடன் மாதிரிப் பார்க்கிருய்? நான் உன்னைச் சொல்லவில்லை. ஓர் உதாரணத்துக்காக உன் பெயரைச் சொன்னேன். அவ்வளவுதான்'' என்று கூறிவிட்டு மேலே பாடத்தை நடத்தத் தொடங்கினுர்.

நாலு மாணவர்களுக்கு முன்ஞல் தன்னை அவமானத்துக்கு ஆளாக்கக் கூடாது என்பதற்காகவே வாத்தியார் நாசூக்காக அப்படிச் சொல்கிருர் என்பதை அவனுல் நன்ருய்த் தெரிந்துகொள்ள முடிந்தது. அவனுக்கு அவர் முகத்தை நிமிர்ந்து பார்ப்பதற்கே கூச்சமாயிருந்தது. 'பார்வதி பவன்' ஓட்டல் முதலாளி தன்னைப்பற்றிச் சரித்திர வாத்தியாரிடம் புகார் பத்திரம் படித்திருக்கவேண்டுமென்றும் அதை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அவர் தன்னை மறைமுகமாக இடித்துக் காட்டியிருக்க வேண்டுமென்றும் அவனுக்கு நன்கு விளங்கிற்று. மேற்கொண்டு அவர் புத்தர் பெருமானைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போன சரித்திரபாடம் எதுவும் அவன் மூளையில் பதியவேயில்லை. அவன் எண்ணங்கள் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பின்தொடர்ந்தன.

சுமார் ஒரு மாதத்துக்கு முந்தி ஒரு நாள். ராமகிருஷ்ணன் வழக்கம்போல் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தான். அன்று ஏனே நல்ல பசி. 'பார்வதி பவன்' கண்ணுடி பீரோவில் கோபுரங்கள் போல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வகை வகையான இனிப்புப் பண்டங்கள் அவன் வாயில் எச்சிலை வரவழைத்தன. ஓட்டலுக்குள் நுழைந்து அந்தப் பட்சணங்களை ருசி பார்க்க எத்தனையோ நாளாக அவனுக்கு ஆசைதான். அன்று அவன் குடலைக் குடைந்து கொண்டிருந்த பசி அந்த ஆசையைக் கொழுந்து விட்டு எரியச் செய்தது. 'கையில் காசு கிடைக்கும்போது எப்படியும் கொடுத்துவிடலாம்' என்ற அசட்டுத் துணிச்சலுடன் அவன் 'மளமள' வென்று உள்ளே புகுந்துவிட்டான். சரியாக ஒரு ரூபாய்க்கு விழுங்கினுன். மறுநாள் பணம் கொடுப்பதாகச் சொல்லி விட்டு வீட்டுக்குப் போனுன். 'தினம் நம் கடையைத் தாண்டிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போகிற பையன் அப்படி மோசம் பண்ணிவிடுவாஞ' என்ற நம்பிக்கையின் பேரில், அவன் அளித்த வாக்குறுதியை முதலாளியும் ஏற்றுக்கொண்டார். திடீரென்று மறுநாளே அவன் கையில் எப்படி ஒரு ரூபாய் முளைக்கும்?

எனவே அவன் ஓட்டல் முதலாளிக்குப் பயந்து வேறு வழியாகப் பள்ளிக்கூடத்துக்கு வரலானுன். அந்த ஓட்டல் இருந்த பக்கம் கால் வைத்து ஒரு மாதம் ஆகிவிட்டது.

மாலை பள்ளிக்கூடத்திலிருந்து ராமகிருஷ்ணன் கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். பின்னுல் யாரோ கைதட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டுத் திரும்பினுன். அழைத்தவர் சரித்திர ஆசிரியர்தான். ராமகிருஷ்ணன் கைகால்கள் நடுங்க அப்படியே நின்ருன். அவனுடைய முகத்திலும் கழுத்திலும் முத்து முத்தாய் வேர்வை பளீரிட்டது, 'நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம்போல்' அவனுக்குத் தன்மேல் வெறுப்புத் தோன்றிற்று. அவர் பக்கத்தில் வந்ததும் ''என்ன சார்?'' என்று ஈன ஸ்வரத்தில் கேட்டான்.

அவர் அன்புடன் அவன் முதுகில் தட்டி, ''ராமகிருஷ்ணு, இன்று வகுப்பில் அந்த மாதிரிப் பேசினதற்

காக என்மேல் உனக்கு வருத்தமா?'' என்ருர். அவர் அன்பொழுக அப்படிக் கேட்ட தோரணை அவன் கண்களைக் கலங்கச் செய்தது. ''இல்லை, சார்!'' என்று முனகினுன்.

''போகிறது போ! இந்தா! இந்த ஒரு ரூபாயை ஓட்டல் முதலாளியிடம் கொடுத்துவிடு. இனிமேல் அப்படிப் பண்ணுதே!'' என்று சொல்லிவிட்டுத் தம் பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து அவனிடம் நீட்டினுர். ''சார்! அவர் முகத்தில் விழிக்க எனக்குச் சங்கோசமாயிருக்கிறது. சார்! நீங்களே சொல்லிக் கொடுத்து விடுங்கள்!'' வாத்தியார் இணங்கினுர். பிறகு, ''ராமகிருஷ்ணு! நான் உன் கடனைத் தீர்க்க முன்வந்ததனுல் என்னைப் பற்றிப் பிரமாதமாக ஒன்றும் எண்ணிவிடாதே. உன் மாதிரிச் சின்னப் பையனுக இருந்தபோது நானும் இப்படித்தான் ஒரு கடையில் இருபத்தைந்து ரூபாய்வரையில் கடன் வைத்துவிட்டேன். ஒரு நாள் கடைக்காரரே எங்கள் வீட்டைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார்.

''அண்ணுதான் வீட்டில் இருந்தார். அண்ணுவிடம் தம் கடையில் நான் இருபத்தைந்து ரூபாய் வரையில் கடன் வைத்திருப்பதைத் தெரிவித்து, பணத்தைக் கைக்கு மெய்யாகக் கொடுத்துவிடும்படியும் இல்லாவிட்டால் நாலு பேரைக் கூட்டிக்கொண்டு வந்து நடுத்தெருவில் நியாயம் கேட்பதாகவும் கத்திஞராம். மானத்துக்கு அஞ்சுகிற ஆசாமியாதலால், என் அண்ணு வேறு ஏதோ அத்தியாவசியமான செலவுக்கென்று வைத்திருந்த பணத்தைக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தார்.

''இதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் சாவகாசமாகச் சாயந்தரம் வீட்டுக்கு வந்தேன். வந்ததுதான் தாமதம். அண்ணு பிடிபிடி என்று பிடித்துக்கொண்டார். உடம்பு பூராத் தழும்பாய்த் தடித்துப் போகும்படி அடித்து, 'ஒழுங்காயிருந்தால் சோறு கீறு கிடைக்கும். இல்லாவிட்டால் ஓடிப் போ' என்ருர். இந்தக் கடுமொழிகள் என் உணர்ச்சிகளைப் பெரிதும் புண்படுத்தின.

''அன்று உடுத்த துணியுடன் ரோசப்பட்டுக்கொண்டு கிளம்பினவன்தான். இது நாள்வரை என் அண்ணுவைக் கண்ணுல் கூடப் பார்க்கவில்லை. அதுமட்டுமல்ல, அவர் இருக்கிற இடம் இன்னதென்றுகூடத் தெரியாது.''— இந்த இடத்தில் இரு விநாடிகள் நிறுத்திவிட்டுக் கண்களில் துளித்த நீரை அவர் துண்டால் ஒற்றிக்கொண்டார். பின்பு மேலும் தொடர்ந்தார்:

''வீட்டைவிட்டு வெளியேறினதும் சோற்றுக்காக நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்லை. கடைசியில் மதுரைக்கு எப்படியோ வந்து சேர்ந்தேன். நாலு பெரிய மனிதர்களை அண்டி, கை நீட்டிப் பணம் வாங்கி ஒருவாருக என் படிப்பை முடித்துக்கொண்டேன். உபாத்தியாயர் தொழிலுக்கும் பயிற்சி பெற்றேன். இதை எல்லாம் உனக்கு எதற்காகச் சொல்கிறேன் என்ருல், என்னைப் போல் புத்தி கெட்டுப் போகாமல், நீயாவது நல்லபடியாக உன் பெற்ருேர்களை விட்டுப் பிரியாமல் வாழ வேண்டும் என்பதற்காகத்தான். அதுவும் நீ உன் அப்பா அம்மாவை விட்டுப் பிரிந்து வந்து மாமா வீட்டில் இருந்துகொண் டிருப்பதாகச் சொல்கிருய். இனிமேலாவது இதுபோல் நடந்து கொள்ளாமல் இரு. என்ன, நான் வரட்டுமா? வாத்தியார் அநாவசியமாக நம் விவகாரத்தில் தலையிடுகின்ருரே என்று நினைத்துக் கொள்ளாதே.''

''இல்லை, சரி!'' என்று துக்கம் தொண்டையை அடைக்க ராமகிருஷ்ணன் பதில் சொன்னுன். அதற்குப் பிறகு அவன் மிகவும் ஜாக்கிரதையாகவும் தன்னடக்கத்துடனும் ஒழுக்கமாயும் நடந்து கொண்டான். பரீட்சைகளெல்லாம் முடிந்ததும் மாமா வீட்டிலிருந்து தன் பெற்ருேர்கள் வசித்து வந்த கிராமத்துக்கு விடுமுறைக்காகப் புறப்பட்டுப் போனுன்.

ஊருக்கு வந்து சேர்ந்தற்குப் பிறகு ஒரு நாள். ராமகிருஷ்ணனின் தந்தை தாறுமாருக ஒழுங்கற்று விளங்கிய தம் அறையைத்



துப்புரவாக ஒழித்துக்கொண் டிருந்தார். அவ்வாறு ஒழுங்குபடுத்தும்போது தமது பெட்டியில் கிடந்த ஒரு பழைய புகைப்படம் ஒன்று அகப்பட்டது. அதைக் கையில் எடுத்துக்கொண்டு அவர் வெகு நேரம் ஊன்றிப் பார்த்தார். இதைக் கண்டு வியப்புற்ற ராமகிருஷ்ணன், 'என்ன படம்' என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் எட்டிப் பார்த்தான். பல வருஷங்களுக்குமுன் எடுத்ததான அதில் தன் அப்பா இன்னொரு பையனைக் கையால் அணைத்தபடி நிற்பதைக் கண்டான்.

''யார் அப்பா, அந்தப் பையன்?''

''ஹூம்'' என்று பெருமூச் செறிந்த அவர், அந்தப் பையன் இன்னார் என்பதையும் அவனுடைய வரலாற்றையும் சொன்னதும், ராமகிருஷ்ணன் உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தான்.

''அப்பா! இருபத்தைந்து ரூபாய் கடன் வைத்துவிட்டு ஓடிப் போன உங்கள் தம்பி எங்கேயும் போய் விடவில்லை. எங்கள் வகுப்புச் சரித்திர ஆசிரியராக இருக்கிறார்'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துவிட்டு, தன் மதிப்புக்குரிய சிற்றப்பாவை அழைத்துவருவதற்காக மறு ரெயிலில் ஏறி உட்கார்ந்தான் ராமகிருஷ்ணன்.

# கெண்டை மீன்




கொஞ்ச காலத்துக்கு முன்னே ஒரு ஜமீன்தார் இருந்தார். வீரமானேரி ஜமீன்தார் என்று அவருக்குப் பெயர். வீரமானேரி என்பது அழகான ஏரி; அதற்கு உயரமான கரை இருந்தது. அவ்வளவு பெரிய கரை மட்டும் இல்லாமல் இருந்தால் ஏரியின் ஜலம் பக்கத்து ஊரையெல்லாம் மூழ்கடித்து விடும். அதனால்தான் எந்தக் காலத்திலேயோ ஊர் ஜனங்கள் எல்லாருமாய்ச் சேர்ந்து அவ்வளவு பெரிய கரையைக் கட்டியிருந்தார்கள்.

அந்த ஏரி ஜலம்தான் பக்கத்து ஊர் நிலங்களுக்கு எல்லாம் பாசனத்துக்கு உபயோகப்பட்டு வந்தது. எந்தக் காலத்திலும் அந்த ஏரியில் ஜலம் வற்றவே வற்றாது. சலசல வென்று அலைகள் வந்து கரையில் மோதிக்கொண்டே இருக்கும். ஏரியைச் சுற்றிலும் கொக்குகளும், நாரைகளும், மடையான்களும், வாத்துகளும் இருந்துகொண்டே இருக்கும். ஏன் தெரியுமா? அந்த ஏரியிலே பலவகையான மீன்கள் இருந்தன. பெரிதும் சிறிதுமாக, ஏராளமாக இருந்தன. அதனால் தான் ஏரி ஜலமே மிகச் சுத்தமாய் இருந்தது. பக்கத்துப் பக்கத்து ஊர் ஜனங்களில் சிலர் கட்டுமரம் கட்டிக்கொண்டு, பரிசல் போட்டுக் கொண்டு தினம் தினம் மீன் பிடித்து வந்தார்கள் ஏரிப் பாசனத்திலிருந்து நெல்லும் தானியங்களும், ஏரியிலிருந்து மீன்களும் அவர்களுக்குக் கிடைத்து வந்தன. ஏரிதான் அவர்களுக்கு உயிர் நாடியாக இருந்தது. ஏரி இல்லாவிட்டால் அவர்கள் ஊரெல்லாம் பாழ்தான்; பாலைவனந்தான். வீரமானேரி ஜமீன்தார் அந்த ஏரியைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து வந்தார்.

வீரமானேரி ஜமீன்தாருக்கு வயசாகி விட்டது. அவருக்கு வெகு நாள் வரையில் குழந்தை இல்லாமல் இருந்தது. கடைசிக் காலத்தில் ஒரே ஒரு மகன் பிறந்தான். ஒரே மகன் என்றால் கேட்க வேண்டுமா? ரொம்பச் செல்லமாய் வளர்ந்து வந்தான். ஜமீன்தார் அவன்மீது உயிரையே வைத்திருந்தார். ஊர் ஜனங்கள் எல்லாரும் ஜமீன்தாருக்குப் பயப்படாவிட்டாலும் அவருடைய செல்வக் குமாரனான சின்ன ஜமீன்தாரிடம் மிகவும் பயபக்தியோடு இருந்தார்கள்.

குழந்தைகளை அன்பு காட்ட வேண்டிய சமயத்தில் அன்பு காட்டி, கண்டிக்க வேண்டிய சமயத்தில் கண்டித்து வளர்க்க வேண்டியது யார்? பெற்றோர்கள். அவரே எப்போதும் செல்லம் கொடுத்தால் என்ன ஆகும்? குழந்தைகளிடம் முரட்டுத்தனம் தான் வளரும். அந்த மாதிரிதான் சின்ன ஜமீன்தாரும் மகா முரடனாக இருந்தான். யார் என்ன சொன்னாலும் காது கொடுத்துக் கேட்க மாட்டான். அவன் வாத்தியாருக்குக்கூட அவன் பயப்பட மாட்

டான். இன்னும் சொன்னுல் வாத்தியார்தான் அவனிடம் பயப் படுவார். ஜமீன்தார் பிள்ளை யில்லையா? அதனுல்தான்.

அவனுக்கு அந்த ஊரில் பல இளம் நண்பர்கள் இருந்தார்கள். எல்லாரும் அவனைச் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். அவன் சொல்படியே கேட்பார்கள். எல்லாரையும்விட ரங்கசாமி என்ற பையன்தான் அவனுக்கு ரொம்பச் சிநேகம்.

ஒரு நாள் திடீரென்று ரங்கசாமி யின் வீடு தீப்பிடித்துக் கொண்டது. காரணம் சின்ன ஜமீன்தார்தான் என்று தெரிந்தது. அவன் சொல் லித்தான் ரங்கசாமி தன் வீட் டையே ஒருவருக்கும் தெரியாமல் கொளுத்திவிட்டான்.

ரங்கசாமியின் அப்பா ஒரு குடி யானவன். அவன் வந்து பெரிய ஜமீன்தாரிடம் முறையிட்டான். ''இந்தமாதிரி சின்ன ஜமீன்தார் சொல்லித்தான் எம் பையன் வீட்டைக் கொளுத்திப்பிட்டான்'' என்று கதறினுன்.

வீரமானேரி ஜமீன்தார் பையனைக் கூப்பிட்டு விசாரித்தார். ''ஏன் தம்பி, அவர்கள் வீட்டைக் கொளுத்தச் சொன்னுய்?'' என்று அவர் கேட்டார்.

''அவர்களுக்கு நல்லதுதானே பண்ணினேன்?'' என்ருன் அவன்.

''வீட்டைக் கொளுத்துவதா நல்ல காரியம்?''

''ஆமாம்; அந்த ரங்கசாமி நாளுக்கு நாள் இளைத்துவந்தான். அவர்கள் வீட்டில் ஏராளமாக மூட்டைப் பூச்சிகள் இருந்ததாம். என்ன செய்தும் அந்த மூட்டைப் பூச்சிகளை அழிக்க முடியவில்லை யாம். ஒரு மூட்டைப் பூச்சியைக் கொன்ருல் மறுநாள் நூறு மூட் டைப் பூச்சிகள் உற்பத்தியாச்சாம். அதற்குத்தான் நான் ஒரு நல்ல வழி சொல்லிக் கொடுத்தேன். மூட்டைப் பூச்சியை அழிக்கா விட்டால் இவர்களை அவை அழித்து விடாதா? அவைகள் அடியோடு அழிவதற்குத்தான் அந்த யோசனை யைச் சொல்லிக் கொடுத்தேன். வீட்டையே கொளுத்திவிட்டால் எல்லாம் நெருப்பிலே வெந்து அழிந்து போய்விடும். அப்புறம் அவர்களைக் கடிக்காது. தொந்தரவு பண்ணி, தூக்கத்தைக் கெடுக் காது. இது ஒரு தப்பா?'' என்று சொன்னுன் அவன்.

''ஏண்டா குழந்தை, மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவதா? ஒரு சின்னத் தொந்தரவு போவதற்காகப் பெரிய கஷ்டத்தை உண்டாக்கு வதா?'' என்றெல்லாம் பெரிய ஜமீன்தாரும், அவனுடைய வாத்தியாரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். அவன் காதில் ஏறவே யில்லை. அப்புறம் ஜமீன்தார், ரங்கசாமியின் அப்பா வுக்குப் பணம் காசு கொடுத்து, வேறு வீடு கட்டிக் கொள்ளச் சொன்னுர். எல்லாரும் போன பிறகு, ''தம்பீ, அதே போல ஒரு சின்ன காரியத்தைச் சாதிப்பதற் காக ஒரு பெரிய காரியத்தைச் செய்யப்படாது. அதன் விளைவு களைக் கவனியாமல் ஆராயாமல் செய்து விடப்படாது'' என்று புத்திமதிகள் சொன்னுர். எல்லா வற்றிற்கும் அவன் 'சரி சரி' என்று தலையை ஆட்டிவிட்டுப் போய் விட்டான்.

இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு ஒரு புதிய பொழுது போக்கு என்ன தெரியுமா? வீட்டிலேயே மீன் வளர்ப்பதுதான். இல்லையா? கெண்டை மீன், வரால் மீன், தங்கமீன் என்று எல்லாம் உயி ரோடு பிடித்து வாங்கிக்கொண்டு வந்து, கண்ணுடித் தொட்டி களிலே போட்டு, அதை வளர்க் கிருர்கள். அவைகளை நண்பர்களுக்கு எல்லாம் காட்டிப் பெருமைப்படு கிருர்கள். அதைப் பார்க்கும் மற்றக் குழந்தைகளும் தாங்களும் இதே போல வளர்க்கவேண்டும் என்று ஆசைப் படுகிருர்கள்; ஆனந்தப்படுகிருர்கள். ஒருவன் செய்தால் எல்லாரும் செய்ய ஆசைப்படுவது இயற்கைதானே?

இதே போல அந்தக் காலத்தில் சின்ன ஜமீன்தாரும் ஆசைப் பட்டான். மீன்கள் என்ருல் அவ னுக்கு ரொம்ப ஆசை. அவைகளை வளர்ப்பதில் அவனுக்கு மகா ஆனந்தம். அதற்காக அவர்கள்

மாளிகையின் பின்புறத்திலே ஒரு சின்னக் குளம் வெட்டித் தரச் சொன்னான். அதிலே சின்னச் சின்ன மீன்களைக் கொண்டுவந்து உயிரோடு விடச் சொன்னான். சிவப்பு மீன்கள், மஞ்சள் மீன்கள், கறுப்பு மீன்கள்; குஞ்சுக் குஞ்சு மீன்கள் எல்லாம் இருந்தன. அவற்றின் குஞ்சு வட்டக் கண்களும், மின்னும் வெள்ளைச் செதில்களும் பார்க்கப் பார்க்க ஆசையாக இருக்கும். அவை வட்டமடிப்பதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருக்கும். வருபவர்கள் போகிறவர்கள் எல்லாருக்கும் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் போய்க் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வான்.

ஆனால் அவனுடைய பெருமை ரொம்ப நாள் நீடிக்கவில்லை. அவனுடைய சின்னக் குளத்திலே எல்லா மீன்களும் இருந்தாலும் கெண்டை மீன் ஒன்றுகூட இல்லை. மீனிலே அழகு கெண்டை மீன்தானாம். அதை யாரோ வந்து அவனிடம் சொல்லி விட்டார்கள். அவ்வளவு அழகான மீன் இல்லாத குளம் எதற்குப் பிரயோஜனம்? அவனுடைய குளம் என்றால் பிறர் பார்த்து, அப்படியே பிரமித்துப் போக வேண்டாமா?

அவன் இதற்கு என்ன செய்வது என்றே யோசித்தான். பரிசல்காரர்களையெல்லாம் கூப்பிட்டு எப்படியாவது உயிரோடு இரண்டு மூன்று கெண்டை மீன்களைப் பிடித்துவரச் சொன்னான். அவர்களும் பரிசலிலும் கட்டுமரங்களிலும் போனார்கள். அவர்கள் மாளிகையின் பின்புறத்தில்தான் ஏரியும் இருந்தது. அதாவது பெரிய கரைக்கு இந்தப்புறம் சின்ன ஜமீன்தாரின் குளம்; அந்தப் புறம் அலைமோதும் அகண்ட ஏரி. சின்ன ஜமீன்தார் கரையிலே உட்கார்ந்து பரிசல்காரர்களைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். வெகு நேரம் கழித்து அவர்கள் வெறுங் கையோடுதான் திரும்பி வந்தார்கள். சின்ன ஜமீன்தாருக்கு மனசு உடைந்து போய்விட்டது.

மழை பெய்து ஏரி நிரம்பியிருந்ததால் மீன்கள் கைக்கு அகப்படவில்லை என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். அதுவும் உண்மைதான். ஏரி வாயால் நிரம்பி வழிந்தது. கலுங்குகளையெல்லாம் அடைத்துவிட்டார்கள். இல்லாவிட்டால் ஊரே வெள்ளத்தில் மூழ்கிவிடும்.

இந்தச் சமயத்தில் ரங்கசாமியும் வந்தான். இருவரும் வெகு நேரம் யோசனை செய்து பார்த்தார்கள்.



முதலில் அவர்களுக்கு ஒன்றும் வழி தெரியவில்லை.

“கெண்டை மீன் இல்லாத குளம் என்ன குளம்டா, ரங்கசாமி” என்றான் சின்ன ஜமீன்தார்.

“ஆமாம், எஜமான். கெண்டை மீன் இல்லாத குளம் ஒரு குளமே இல்லை” என்றான் ரங்கசாமி.

“ஹை! நான் ஒரு வழி கண்டு பிடிச்சுட்டேன்” என்று திடீரென்று சத்தம் போட்டான் சின்ன ஜமீன்தார்.

''என்ன, என்ன?'' என்றான் ரங்கசாமி.

''அதுவா? இங்கே பார். மெதுவாக உள்ளே போய் ஒரு கடப்பாரை கொண்டுவா. இருட்டினப்புறம் இந்தக் கரையைக் குடைந்து விடுவோம். ஏரி ஜலம் அதன் வழியாகக் குளத்துக்கு வரும். இல்லையா? ஏரி ஜலம் வந்தால் கெண்டை மீனும் வந்துதானே ஆகவேண்டும்? கெண்டை மீன் வந்தப்புறம் இந்த ஓட்டையை நாம் அடைத்து விடுவோம். போய், நம் நண்பர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு வா'' என்றான்.

ரங்கசாமிக்கு அந்த யோகனை சுலபமானதுபோல் தோன்றினாலும் பயமாக இருந்தது. கெண்டைக்காக ஏரியை உடைப்பதா? ஏரி உடைத்துக் கொண்டால் ஊரே வெள்ளப் பாழாகி விடும் என்று அவன்



கேள்விப்பட் டிருக்கிருன். இருந் தாலும் என்ன செய்வது? ஜமீன் தார் பையனுடைய தயவு வேணுமே, அதற்காக அவன் ஓடிப் போய் இன்னும் சில நண்பர்களை ரகசியமாக அழைத்து வந்தான். ரகசியமாகப் போய்க் கடப்பாரை யைக் கொண்டுவந்து கொடுத் தான். எல்லாரும் இருட்டட்டும் என்று அங்கே காத்திருந்தார்கள்.

மெல்ல இருட்டத் தொடங் கியது. எல்லாப் பையன்களும், கடப்பாரையை எடுத்துக்கொண்டு, கொஞ்சங்கூட யோசனை செய்யாமல் ஏரியின் கரையைக் குடையத் தொடங்கினுர்கள்.

வேலை மும்முரமாக நடந்தது. சின்ன ஜமீன்தார் எல்லாப் பையன் களையும் விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தான். மழை பெய்து, கரையெல்லாம் சொத சொத என்று இருந்ததால் அவர்கள் வேலை சுலபமாக இருந்தது. அநேகமாக, கரையின் மேல் பாகத்தைத்தான் அவர்கள் குடைந்தார்கள். கரையில் உடைப்பு ஏற்பட்டால் என்ன ஆகும் என்பதை அவர்கள் உணர வில்லை.

ஏரியின் ஜலம் முதலில் கசிந்து வந்தது. பிறகு சர்ரென்று அந்த ஓட்டை வழியே வரத்தொடங் கியது. அதற்குப் பிறகு 'குபு குபு' வென்று பெருகத் தொடங்கியது. சற்று நேரத்தில் மண் கரை இடிந்து இடிந்து இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இருந்தவர்கள் தெரியவில்லை. தண்ணீர்ப் பிரவா கத்தில் பிரிந்து விட்டார்கள்.

ரங்கசாமி உயிருக்குப் பயந்து கரைமீது ஏறி ஊருக்குள் ஓடத் தொடங்கினுன், ''ஐயோ உடைப்பு, ஏரி உடைத்துக் கொண்டு விட்டது'' என்று கூவிக் கொண்டே ஓடினுன். தெருத் தெருவாக வீடு வீடாகப் போய்க் கத்தினுன்.

இவனுடைய கூச்சலைக் கேட்டு, மிரண்டு போன ஊர் ஜனங்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, மண்வெட்டியும் கூடை யும் எடுத்துக் கொண்டு ஏரி கரையை நோக்கி ஓடி வந்தார் கள்.

அதற்குள் என்ன பரிதாபம்! ஜமீன்தார் மாளிகையில் ஒரே ஓலம். மாளிகைக்குள் எல்லாம் ஏரி ஜலம் நுழைந்து விட்டது. வயலும் வாய்க்காலும் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. இருட்டில் எங்கே பார்த் தாலும் ஒரே கூக்குரல் மயமாக இருந்தது.

இரவு நேரத்தில் எதுவும் தெரியவில்லை. எல்லாரும் மரத்தின்மேலும் வீட்டின்மேலும் ஏறிக்கொண்டார்கள். சிலர் உடை படாத ஏரிகரையின் பாகத்தில் நின்று மண்ணை மூட்டை மூட்டை யாகக் கட்டி, வைக்கோலைப் போர் போராகக் கொண்டு வந்து உடைப் பில் போட்டு அடைத்து வந்தார் கள். நூற்றுக்கணக்கான குடியான வர்கள் மண்ணை மூட்டையாகக் கட்டுவதிலும் வைக்கோலைக் கட்டுக் கட்டாகக் கொணடு வரு வதிலும் முனைந்திருந்தார்கள். இரவு முழுவதும் வேலை நடந்தது. ஊர் வெள்ளத்தில் மூழ்கின சமயத்தில்தான் அவர்களால் உடைப்பை ஒருவாறு அடைக்க முடிந்தது.

பொழுது விடிந்தது. ஜமீன்தார் உடைப்பினுல் ஏற்பட்ட அதோகதி யைக் கண்டு மனம் உடைந்து போனுர். செல்லமாக வளர்த்த பையனைத் தேடிப் பிடித்து, ''ஐயோ பாவி, கெண்டைக்காக ஏரியை உடைத்துவிட்டாயே!'' என்று தலையில் தலையில் போட்டுக் கொண்டார். மூர்ச்சித்து விழுந்து மண்டையை கீழே உடைத்துக் கொண்டார்.

சின்ன ஜமீன்தாருக்கு அப்போது தான் நல்ல புத்தி வந்தது. புத்தி வந்து என்ன பயன்? கெண்டை வரவில்லை; ஆனுல் அவன் தந்தை யின் மண்டைதான் உடைந்தது.

# ஞாபகமறதி

## ஆர். நடராஜன்

அன்றைத் தினம்தான் கால் வருஷப் பரீட்சை ஆரம்பம். "டேய் கண்ணு, மணி ஒன்பது ஆகிறது. சீக்கிரம் சாப்பிட வா. வண்ணனுக்குப் போட்ட சொக்காயையும் டிராயரையும் எடுத்துப் பெட்டி மேல் வைத்திருக்கிறேன். பேனுவில் இங்க் இருக்கிறதா என்று பார். இல்லாவிட்டால் இப்பொழுதே போட்டுத் தயாராக வைத்துக்கொள். பரீட்சை எழுதும் அட்டையை எங்கே வைத்திருக்கிருய்? அப்புறம் அவசரத்தில் எதையும் விட்டுவிட்டுச் சென்று விடாதே" என்று எச்சரித்தாள் அவன் பாட்டி.

வீட்டில் வயதானவர்கள்மீது, 'என்னடா, எப்பொழுது பார்த்தாலும் தொண தொணவென்று ஏதாவது சொல்லிக்கொண்டேயிருக்கிருர்களே' என்று வெறுப்படைகிருேம். ஆனல் சமயத்துக்கு நம்மை ஞாபகமூட்டும் அல்லது நமக்கு சமய சஞ்சீவி போல் உதவியாக இருப்பவர்கள் அவர்கள்தான் என்று சில சமயங்களில் நாமே வாய்விட்டுப் புகழ்கிருேம்.

"பாட்டீ, நீ சொல்லாவிட்டால் பரீட்சை ஹாலில் போய்த்தான் பேனவை உதறி உதறிப் பார்த்து விட்டு இங்க் இல்லையே என்று கையைப் பிசைவேன். இதற்குத்தான் வீட்டில் ஒரு பாட்டியாவது தாத்தாவாவது வேணும் என்பது" என்று சொல்லிக்கொண்டே தான் போட்டிருந்த சட்டைப் பையிலிருந்து பேனவை எடுக்கச் சென்ருன்.

அங்கே சென்ற அவன் பல்லை 'நறநற' என்று கடித்துக் கொண்டே, "டீ பத்மா, எங்கே ஒழிந்தாள் அவள்? வீட்டில் ஒன்று வைக்க யோக்கியதை இல்லை. பையைப் பார்த்தால் பேனவைக் காணும்" என்று சொல்லிக் கடுகடுத்தான். அங்கே ஓடிவந்த பத்மா, "ஐயையோ, எனக்குத் தெரியவே தெரியாதே, நான் பார்க்கவே இல்லையே" என்ருள். "பத்மா, பரீட்சை சமயம். விளையாடாதே அம்மா" என்ருள் பாட்டியும். "நீ எடுக்காவிட்டால் அதுக்கே கால் முளைத்து விட்டதா? நேற்றுச் சாயங்காலம் நான் சட்டையைக்



கழற்றும்போதுகூடத் தவறிக் கீழே விழுந்தது. அதை எடுத்துப் பையிலிலேயே செருகினேன். நன்றாக ஞாபகம் இருக்கிறது'' என்று சிடுசிடுத்தான் கண்ணன்.

''சுத்தப் பொய். பொய்... எனக்கும் இப்போதான் ஞாபகம் வறது. நேற்று நீ வந்து சட்டையைக் கழற்றும்போது நான் இங்கேதான் இருந்தேன். உன் சட்டைப் பையைப் பார்த்தபோது பேனாவைக் காணவேயில்லை. 'எங்கே அண்ணா, காணோம்?' என்று கேட்க வாயெடுத்தான். அதற்குள் உன் வம்புக்குப் போவானேன் என்று சும்மா இருந்துவிட்டேன். நீ பள்ளிக்கூடத்திலேயோ, பிளே கிரௌண்டிலேயோ விட்டிருப்பாய். ஞாபகப்படுத்திப் பார்'' என்று அழுதுகொண்டே சொன்னாள் பத்மா. ''சரி; நீ அப்பா பேனாவையாவது எடுத்துண்டு போ. பரீட்சைக்கு நாழி ஆயிடப் போறது'' என்றாள் பாட்டி.



ஆசிரியர்: டேய் சோமு, அக்பர் எப்போ பட்டத்துக்கு வந்தார்.

சோமு: அவருடைய அப்பா இறந்துபோன உடனே, சார்!

ஏதோ ஞாபகம் வந்தவன்போல் சட்டென்று, ''சற்று இரு, இதோ ஓடிப்போயிட்டு இப்பவே வந்துடறேன்'' என்று சொல்லிக்கொண்டே பக்கத்துத் தெருவிலிருந்த சந்துருவின் வீட்டிற்கு ஓடினான் கண்ணன். ''டேய் சந்துரு, நேற்றுச் சாயங்காலம் வாலி பால் கிரௌண்டில் நீ வைத்தாயே, உன் பர்ஸ் ரிஸ்ட்வாட்சு எல்லாம். அதுக்குப் பக்கத்தில்தான் வைத்திருந்தேன், நானும் பர்ஸ் பேனா எல்லாம். கடைசியில் எடுத்துவர மறந்துவிட்டேன். நீ வரும்போது எடுத்துக் கிடுத்து வச்சிருக்கயோ?''

''நான் என்னுதைத்தான் எடுத்துண்டு வந்தேன். எங்கே போயிடும்? யாராவது எடுத்து வச்சிருப்பார்கள். பள்ளிக்கூடத்துக்கு வா. கேட்டுப் பார்க்கலாம். ஆனால் ஒன்றுமட்டும் சொல்றேன். அந்த ராமு தம்பி கோபு இருக்கானே, அவன் எடுத்திருந்தா மட்டும் உனக்குக் கிடைக்கவே கிடைக்காது.''

''அப்போ, என்னடா செய்யறது?''

''எங்கிட்டே ரெண்டு பேனா இருக்கு. இந்தா, இதை வச்சிண்டு பரீட்சை எழுது. சாப்பிட்டுவிட்டுச் சீக்கிரம் வா. போகலாம். நாழி ஆயிடுத்து.''

''டேய் சந்துரு, நீ முன்னாலே போய் எல்லாரையும் கேட்டுப் பாரு. அதற்குள்ளே சாப்பிட்டுட்டு நானும் வந்துடறேன்.''

சந்துரு பள்ளிக்கு வந்து எல்லாரையும் விசாரித்தான். யாரும் எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். கண்ணனும் அதற்குள் வந்து சேர்ந்தான்.

''டேய் கண்ணா. எல்லாரையும் கேட்டேன். உன் பேனாவை யாரும் பார்க்கவேயில்லை என்கிறார்களடா. ஆனால் எல்லாரும் கோபுதான் கிரௌண்டிலேருந்து கடைசியில் வந்தான் என்கிறார்கள்.''

''அவனையும் கேட்டுப் பார்க்கலாம் வா.''

''போடா. திருட்டுப் பயல், அவன் இன்னும் வரவேயில்லையே.''



‘‘அடடா, மணி அடிக்கிறதே!’’

‘‘சரி, ஹாலுக்குப் போகலாம் வா. பரீட்சை எழுதிட்டு அவன் வெளியிலே வரும்போது ஒரு கை பார்த்துக்கலாம்.’’

இரண்டாவது பெல் அடித்து வினாத்தாள் கொடுத்தாகி விட்டது. எல்லாரும் பதில் எழுதத் தொடங்கிவிட்டனர். அப்போது தான் கோபு அவசரமாக உள்ளே நுழைந்தான். அவனும் வினாத்தாள் வாங்கிக்கொண்டு பரீட்சை எழுதினான். பையன்கள் ஒருவருக்கொருவர் கண்களால் பேசிக்கொண்டனர். கண்ணன், சந்துரு மற்றும் அவன் சகாக்கள் சிலரும் அரை மணி முன்னதாகவே பரீட்சையை எழுதி முடித்துவிட்டு, வெளியே வந்து காத்திருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசினர்.

‘‘டேய், நம்ப எல்லாம் கிளம்பி வரும்போது அந்தக் கோபு முழிச்சு முழிச்சுப் பாத்துண்டே இருந்தாண்டா.’’

‘‘ஆடு திருடின கள்ளன் மாதிரின்னு சொல்லேண்டா. சொல்லக் கூடத் தெரியலையே.’’

‘‘அவன் முழியே அவன்தான் திருடியிருக்கான்னு சொல்றதோல்லியோடா?’’

‘‘உனக்கு இன்னும் சந்தேகம் வேறயா? அவனைத் தவிர யார் எடுத்துண்டு போயிடுவாளாம்?’’

‘‘பாவம். வரும்போது சாமர்த்தியமா வந்துட்டான். இப்போ வீட்டுக்குப் போறச்சேன்னா இருக்கு ஐயா பாடு!’’

‘‘டேய் டேய், அதோ வந்துட்டாண்டா.’’

‘‘டேய், முதல்லே நான் கேக்கறேன். எடுக்கல்லேன்னு சொன்னா, அப்புறம் எல்லாரும் ஒரு கை பார்த்துக்கலாம். அவசரப் படாமெ நம்ப கிரௌண்டுப் பக்கம் அவனை அழைச்சிண்டு போய், நடத்தணும் காரியத்தை’’ என்றான் சந்துரு ‘குசு குசு’வென்று.

கோபுவையும் அழைத்துக் கொண்டு கிரௌண்டுக்குச் சற்றுத் தூரத்தில் வந்தனர். ‘‘கோபு, நேற்று கிரௌண்டிலேருந்து திருடிண்டு—இல்லை எடுத்துண்டு - போனாயே, அதை மரியாதையாகத் திருப்பிக் கொடுத்துடு’’ என்றான் சந்துரு. அவன்தான் கண்ணனுக்கு ஆப்த நண்பன். அவர்கள் டீமுக்கும் தலைவன். கிளாஸிலேயும் மானீட்டர். பணக்காரப் பையனும்கூட.

‘‘எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. நான் ஒன்றும் எடுத்துண்டே போகல்லியே’’ என்றான் கோபு.

''டேய், உண்மையை ஒத்துக்கலே, எல்லாரும் சேர்ந்து தோலை உறிச்சுப்பிடுவோம், மரியாதையா குடுத்துடு'' என்றான் வாண்டுப் பயல் சுப்புக்குட்டி.

''டேய் தம்பி, உன் ஜபம் சாயாது. கொடுக்கலேன்னா, தானே கக்கும்படியாப் பண்ணி விடுவோம். ஜாக்கிரதை'' என்றான் கோடி வீட்டுப் பொன்னுரங்கம்.

''ஏய், வாயாலே கேட்டா ஒரு நாளும் ஒத்துக்க மாட்டான். நகருங்க, ஒரு செகண்டிலே நான் வரவழைக்கிறேன் பாரு.'' இது குள்ளச் சாமா.

''டேய் சாத்வீகமா நான் ஒரு வழி சொல்றேன். சட்டைப்பை, கைப்பை எல்லாத்தையும் சோதனை போடலாம். நம்ப சாமான் கிடைச்சாலும் சரி, இல்லை அந்த மதிப்புக்கு வேறு ஏதாவது கிடைச்சாலும் சரி. பிடுங்கிண்டு விட்டுடலாம்'' என்றான் ராஜு.

''ராஜு சொல்றதுதாண்டா சரியான வழி. டேய், சட்டைப்பை கனக்கிறதுடா! டேய், சரியா ரூ 8-8-0. போதும் நமக்கு. ஆளை விட்டுடு. பாவம்!''

''ஐயோ, அது ஸ்கூல் பீஸ் கட்டின பாக்கி. வீட்டில் அதைக் கொடுக்கல்லேன்னா அம்மா என்னைக் கொன்னுடுவாள். உங்கள் சாமான்களை நான் உண்மையாகவே எடுக்கவேயில்லையே'' என்று கதறி அழுதான் கோபு. அவன் சொல் இப்போது எடுபடுமா? இன்னும் அங்கே தங்கினால் சிலர் அடிக்கவும் அடிப்பார்கள்என்று கண்ணீரும் கம்பலையுமாய் வீட்டுக்குச் சென்றான்.

ராஜு கொஞ்சம் அறிவுள்ளவன். அவன், ''கண்ணன் மேல் தான் தப்பு என்று நான் சொல்வேன். அவன் கிரௌண்டில் வைத்துவிட்டு மறந்துவிட்டால் கோபுதான் எடுத்திருப்பான் என்று எப்படிச் சொல்ல முடியும்? வேறு யாரும் எடுத்திருக்கக் கூடாதா? வைக்கத் தெரியாத இடத்தில் வைத்துவிட்டுத் திண்டாடுவது'' என்று கண்ணனைக் கோபித்தான்.

''வைக்கத் தெரியாத இடம் ஒன்றுமில்லை. எல்லாரும் வாருங்கள். நான் வைத்த இடத்தைக் காட்டுகிறேன்'' என்று அழைத்துச் சென்றவன் அந்த இடத்தைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவன் வைத்தவைகள் அதே இடத்தில் அப்படியே இருந்தன. அவன் முதல் நாள் ஜேபியில் பேனா, பர்ஸ் இவற்றுடன் சில பரீட்சைக் குறிப்புகள் வைத்திருந்தான். அவை பறக்காமல் இருக்க எல்லாவற்றின் மீதும் ஒரு செங்கல்லை எடுத்து வைத்திருந்தான். ஆதலால் அவை யார் கண்ணிலும் படவில்லை. அப்படியே இருந்தன. எல்லாப் பையன்களும் கோபுவின் வீட்டுக்குச் சென்றனர். ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விட்டு, கோபுவிடம் கண்ணன் மன்னிப்புக் கோரினான். ஞாபக மறதியால் என்ன விபரீதம் ஏற்பட்டுவிடுகிறது பார்த்தீர்களா? ..



சென்னையில் குழந்தைகள் தினக் கொண்டாட்டத்தின்போது நடைபெற்ற அணிவகுப்பை ஜனாதிபதி பார்வையிடும் காட்சி.

# சேற்றில் பொன்

## தங்கமணி

ஒன்றிரண்டு தடவைகள் அப்படியும் இப்படியுமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, சோமுவின் அண்ணியிடம் என்னவோ ரகசியமாகக் கூறினான், வரதன். அவன் ரகசியமாகக் கூறிய செய்தியைக் கேட்டதும், ''ஆ, அப்படியா!...'' என்று கூவினாள், அண்ணி.

''ஆமாம், அக்கா...நான் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்றால், இப்போதே என்னுடன் வாருங்கள். நேருக்கு நேராக நிரூபிக்கிறேன்; பாருங்கள்! நீங்கள் இப்போதே அவனைத் தக்கபடி கண்டித்து அடக்காவிட்டால், அப்புறம்... பகுத்தறிவு, பன்னாடை அறிவு என்று என்னென்னவோ பிதற்றிக் கொண்டு பாழாகிப் போய் விடுவான்!.....''

''சரி, இந்த விஷயத்தை நீ யாரிடமும் சொல்லிவிடாதே! அவன் வரட்டும்...'' விழிகளை உருட்டி, புருவங்களை நெளித்து, உதட்டைக் கடித்துக்கொண்டு ''ஹூம்ம்!...'' என்று மூக்கால் சீறினாள், சோமுவின் அண்ணி.

* * *

''கணேஷ்! கணேஷ்!...'' இந்தக் குரலைக் கேட்டதும், சைக்கிளில் போய்க்கொண்டிருந்த கணேசன் சைக்கிளை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான். கொஞ்ச தூரத்திலுள்ள பஸ் நிற்குமிடத்தில் தன் தோழி ரமேலாவுடன் நின்றுகொண்டிருந்தாள் பரிமளம்.

கணேசன் முகத்தில் புன்னகை தவழ, சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போனான். பரிமளத்தை அணுகினான். ''வணக்கம், பரிமளம். கண்ணன் அறிவியல் மன்றத்தின் ஆண்டுத் தேர்வுக் கூட்டம் இனிதாக முடிந்திருக்கும் என்று நம்புகிறேன்....''

''ஏதேனும் சச்சரவு....''

''ம்...நமது பேரறிஞர் வரதன் கலந்து கொள்ளும் காரியங்கூட சண்டை, சச்சரவு இல்லாமல் நடந்தேறி விடுமா...?''

''அது சரி. அவன்தான் எப்போதும் எதிர்க் கட்சி ஆளாயிற்றே!... ஆமாம், மன்றத்தின் செயலாளராக யாரைத் தேர்ந்தெடுத்தீர்கள்...?''

''சோமு முன்மொழிய, ரமேலா வழிமொழிய, பெருவாரியான ஒப்புதல்களின் பேராரவாரத்துடன் மன்றத்தின் செயலாளனாக, அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய நமது தங்கப்பன் தேர்ந்தெடுக்கப்பட்டான்!....''

''முல்லைச்சேரி தங்கப்பன் தானே, ரொம்பச் சந்தோஷம்! ஆனால், வரதனுக்குத்தான் இது கொஞ்சமும் பிடிக்காது. அவன் மிகவும் மனச் சங்கடப்பட்டிருப்பான்!''

''ஹூம்!... என்ன பண்ணுவது? வரதன், தன்னைத் திருத்த முயலுகின்ற யாரையும் தன்னுடைய விரோதியாக எண்ணி விடுகிறானே! அப்படித்தானே இன்றைக்கு நாமெல்லோரும் அவனுடைய விரோதிகளாகி யிருக்கிறோம்!...'' என்றாள் பரிமளம், பிறகு பரிமளத்தினிடமும், ரமேலாவிடமும் விடைபெற்றுக் கொண்டு சைக்கிளில் ஏறிக் கொண்டு தங்கப்பனைச் சந்திக்கச் சென்றான் கணேசன்.

* * *

மாடிப் பால்கனியில் மெத்தென்ற சோபாவில் சாய்ந்தமர்ந்து கொண்டு, ஏதோ பின்னல் வேலை செய்துகொண்டிருந்தாள், சோமுவின் அண்ணி.

அப்போது, மகிழ்ச்சி தவழும் ஒரு குரல். ''அண்ணி, ஒரு சந்தோஷச் செய்தி!....''

அண்ணி, சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். சோமு, துள்ளிக் குதித்துக் கொண்டு வந்தான். புழுப் பூச்சியைக் கண்டவளைப்போல, அண்ணி சோபாவிலிருந்து விருட்டென்று எழுந்து ஆத்திரத்துடன் சீறினாள். ''என்னைத் தீண்டாதே, எட்டிப் போ!....''

ஏதும் விளங்காத சோமு, திடுக்கிட்டுப் பிரமித்துப் பரக்கப் பரக்க விழித்தவாறே, ''ஏன் தீண்டக்கூடாதாம்..?'' என்று கேட்டான்.

''ஊட்டி வளர்க்கும் பூனைதானென்றாலும், சேற்றுப் பன்றியுடன் உருண்டுவிட்டு வந்தால், இங்கே யாரும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்!..''

''என்ன சொல்லுகிறாய், அண்ணி? எனக்கொன்றும் புரியவில்லையே! கொஞ்சம் விளங்கும்படிதான் சொல்லேன்!..''

''தோட்டிச் சேரியிலே உனக்கென்ன வேலை? அந்தப் பிள்ளைகளுடன் உனக்கென்ன சிநேகம்?''

அண்ணியின் கேள்விகளைக் கேட்டதும் அவனுக்கு எல்லாம் விளங்கியது. இந்தக் கேள்விகளுக்கு மூலகாரணம் வரதன் தான் என்பதையும் ஊகித்துக் கொண்டான்!..

''அண்ணி..''

''என்ன?..''

''சேற்றில் செந்தாமரை என்று பரிமளம் ஒரு நாடகம் எழுதியிருக்கிறாள். அந்த நாடகத்தை அந்தப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்து வருகிறேன். வரவிருக்கும் காந்தி பிறந்த தின விழாவின்போது..''

''அவர்களுடன் பழகக்கூடாது என்கிறேன்! நம் பழக்க வழக்கங்களைப் பாழ்படுத்த வேண்டாம் என்கிறேன்! சோமு, மேலே பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும்! பேசாமல் போ!''

''சரி, மன்னித்துக்கொள்ளுங்கள், அண்ணி.'' என்னவோ தீவிரமான சிந்தனையுடன் பால்கனியை விட்டுக் கீழே இறங்கினான் சோமு.

மூன்றாவது நாள். மாலை மறைந்து, இருள் சூழும் வேளை



யிலே பரிமளமும் ரமேலாவும் யாரோ ஓர் அழகிய சிறுமியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார்கள். அப்போதுதான், சிங்காரித்துக் கொண்டு மாடியி லிருந்து இறங்கி வராந்தாவுக்கு வந்த அண்ணி, மாடிப்படியின் ஓர மாகத் தயங்கி நிற்கும் பரிமளம், ரமேலா, அவர்களின் புதுத் தோழி மூவரையும் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பார்த்தாள். ''என்ன, பரிமளம், காபிகூடக் குடிக்காமல் எங்கே போய் வருகிருய்? இது யார், புதியவளாயிருக்கிருளே..?'' என்று, அந்தப் புதுப் பெண்ணை விழிவிரிய நோக்கினுள். கண்ணைக் கவரும் வகையில் பகட்டாக உடுத் துக்கொண் டிருக்கும் அந்தப் பெண்ணின் அழகு, அண்ணியின் உள்ளத்தை வெகுவாக மயக்கியது.

''வந்து அண்ணி, இவள்..'' என்று ஆரம்பித்தாள், பரிமளம். உடனே ரமேலா சட்டென்று குறுக்கிட்டாள்: ''வந்து, அக்கா.. இவள்..எங்கள் பள்ளிக்கூடத்து ஹிந்தி வாத்தியாரின் மகள். காஷ்மீரிலிருந்து நேற்றுத்தான் வந்தாள். பெயர் ரூபா. இனிமை யாகப் பாடுகிருள். அற்புதமாக ஆடுகிருள்.''

இதைக் கேட்ட அண் ணிக்கு, மனசு இன்னும் சொக்கி



யது. ''அப்படியென்றால், இந்தக் காஷ்மீர் மோகினி, நம் வீட்டு விருந்தாளி என்று சொல்லுங்கள்!'' என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் கூறினாள். பிறகு எல்லோரையும் அழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள். விருந்து தடபுடலாக நடந்தது முடிந்தது. பிறகு நாட்டிய விருந்து ஆரம்பமாயிற்று.

ரமேலா பாடினாள். பரிமளம் ஆர்மோனியம் வாசித்தாள். ரூபா ஆடினாள். இறக்கை முளைத்த தேவலோகத்துக் குழந்தை மேகமண்டலத்திலே தாவித் தாவி நீந்தி விளையாடுவது போல், அவ்வளவு வசீகரமாக ஆடினாள்!

சற்று நேரத்துக்குள்-பாடலும் ஆடலும் முடிந்தன. இத்தனை நேரமும் ரூபாவின் ஆடலழகிலே மெய்ம்மறந்து கிடந்த அண்ணி, உணர்வு பெற்றுத் தாவியோடினாள். ஆடிக் களைத்து நின்ற ரூபாவை ஆவலும் ஆசையுமாய்க் கட்டியணைத்துக் கொண்டாள். ''அடி என் தேவலோகத்துத் திலோத்தமையே! ரம்பையே!'' என்று பலவாறாகக் கொஞ்சினாள்.

**அ**வர்கள் சென்று சிறிது நேரந்தான் ஆகியிருக்கும்; அதற்குள் வரதன் எங்கிருந்தோ இரைக்க இரைக்க ஓடோடி வந்தான். ''அக்கா! அக்கா!..'' என்று கூவிக்கொண்டே மாடிக்கு ஓடினான். ''யாரது..? என்ன, என்ன..? என்று பதறிக் கொண்டே அண்ணி ஓடி வந்தாள்.

''எங்கே, அந்தப் பெண்..?''

''எந்தப் பெண்..''

''அந்தப் பெண்தான்!''

''என்னடா உளறுகிறாய்! பைத்தியமா, உனக்கு..? எந்தப் பெண்ணைக் கேட்கிறாய்..?'' எரிச்சலுடன் கேட்டாள் அண்ணி.

''பரிமளமும் ரமேலாவும் அழைத்துக் கொண்டு வந்தார்களே, அந்தச் சாக்கடைப் புழுவைத்தான் கேட்கிறேன்!'' ஆத்திரத்துடன் கூவினான், வரதன்.

''யாரைக் குறிப்பிடுகிறாய் சாக்கடைப் புழு என்று, ரூபாவையா?''

''ஐயோ, மோசம்! உன்னை நன்றாக ஏய்த்து விட்டார்கள்! மோசம், சதி, சூழ்ச்சி-இவ்வளவும் செய்து உன்னை..''

''என்னடா, பிதற்றுகிறாய்?''

''அந்தச் சாக்கடைப் புழுவின் பெயர்-ரூபாவா? அழகுதான், அக்கா-அழகுதான்! தினந்தோறும் நம் வீட்டு 'லெட்ரின்'களைக் கழுவுகிறாளே, தோட்டி அங்கையா - அவனை உனக்குத் தெரியுமா?''

''தெரியும்..''

''அந்த அங்கையாவினுடைய மகள் சுப்பம்மாதான் இப்போது ரூபவாக மாறி...''

''புளுகாதே!''

''அக்கா! அந்தத் தோட்டிப் பெண்ணைச் சிங்காரித்து 'ரூபா' என்று பெயர் வைத்து அழைத்து வந்து, காஷ்மீரிலிருந்து வந்தவள், இந்தி வாத்தியாரின் மகள், அப்படி..இப்படி என்றெல்லாம் வர்ணித்து, உன்னைப் பழி வாங்கி விட்டிருக்கிறார்கள்! என் பேச்சில் நம்பிக்கை இல்லை என்றால், இப்படி என்னோடு வா. கீழே, வாசலில் அந்தத் தோட்டி அங்கையாவை அழைத்து வந்திருக்கிறேன். சோமு நடத்தும் இந்தச் சூழ்ச்சி நாடகத்தில் தன்னுடைய மகள் சுப்பம்மாவுக்கு ஏதேனும் ஆபத்து உண்டாகுமோ என்று பயந்து ஓடோடி வந்திருக்கிறான். அவனையே கேட்டுப் பாரு!''

அண்ணி, பால்கனி ஓரத்தில் வந்து நின்று கீழே பார்த்தாள். வாசலின் ஓரமாயிருந்த குண்டு மல்லிகை மரத்தின் அடியில், நகர சுத்தித் தொழிலாளியான அங்கையா அடக்க ஒடுக்கத்துடன் நின்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் நடந்துபோன சம்பவங்களை நினைத்துப் பார்த்ததும், அண்ணியின் உள்ளத்தில் புதிய சிந்தனைகள் பொங்கியெழுந்தன.

'என்ன ஆகிவிட்டது, குடியா முழுகிவிட்டது! எல்லாம் வெறும் மனக் குறும்புதான்! பழகினால் என்னவாம், எது பாழாய்ப் போயிற்று?.. கேவலம், நாய், பூனை இவைகளுடன் நேசம் கொள்ளும்போது, கூடப் பிறந்து



வாழும் மக்களிடம் நட்புச் செய்வதனுல் உண்டாகும் நஷ்டம்தான் என்ன..?'

''அக்கா, 'ரூபா'வாக வந்து போன அந்தச் சாக்கடைப் புழுவை இப்போது சுப்பம்மாதான் என்று ஒப்புக்கொள்கிருய், அல்லவா?''

''வரதா, அந்த ரூபாவை இன்னெரு தடவை 'சாக்கடைப் புழு' என்று சொல்லாதே. அது மிகவும் பாவம்! அவள் சாக்கடைப் புழு அல்ல; சேற்றில் கிடக்கும் பொன்!..''

''அண்ணி! சோமு, பரிமளம் ரமேலா, கணேசன் எல்லாருக்கும் பிடித்திருக்கும் சம தர்ம ஜன்னி உனக்குமா வந்து தொலைந்து விட்டது! ஐயையோ!..'' என்று பதறினுன் வரதன்.

அண்ணி சிரித்தாள்!

பால்கனிக்கு அருகில் நீல நிறத் திரைச் சீலை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. இத்தனை நேரமும் அதனுள் பதுங்கிக்கொண்டிருந்த சோமு, மெதுவாகத் தலையை வெளியே நீட்டிப் பார்த்தான். அண்ணியின் சிரிப்பைக் கண்டான்; அந்தச் சிரிப்புக்குள் 'ஒன்றே குலம்' என்னும் உண்மை ஒளிர்வதை உணர்ந்தான். மகிழ்ந்தான். திரைச் சீலையைவிட்டு வெளியே வந்தான்.

''அண்ணி, உண்மையை எடுத்துக் காட்டுவதற்காக உங்களை ஏமாற்றித்தான் விட்டோம். மன்னிக்க வேண்டும்.''

''சேற்றில் கிடந்தாலும் பொன் பொன்தான் என்பதை இன்றைச் சிறு சம்பவத்தால் எடுத்துக் காட்டிய உனக்கு-உன் தோழர் கூட்டத்துக்கு-என் அன்புள்ள ஆசி! நீங்கள் கற்றுவரும் 'சேற்றில் செந்தாமரை' என்னும் நாடக ஒத்திகைகளை இனிமேல் இங்கேயே நடத்திக்கொள்ளுங்கள்..''

''வரதா, எங்கே நழுவுகிருய், நில்!'' என்ருள் அண்ணி.

வரதன் அங்கே நிற்கவில்லை; ஆமாம், திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஓடோடிப் போய் விட்டான்!

ஒளி பிறந்ததும் மூடத்தனம் என்னும் கொடிய இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய்த் தானே ஆகவேண்டும்..?



# பாலர் கவி அரங்கம்

## வல்லவனுக்கு வல்லவன்

எங்கள் வீட்டுக் கொல்லையில்
　　இருந்த பெரிய மரத்திலே
ஜோடிக் காக மிரண்டுதான்
　　கூடிக் குஞ்சுடன் வாழ்ந்தன.
அன்ருருநாள் காலையில்,
　　பள்ளி செல்லும் வேளையில்,
கொன்று சிட்டின் குஞ்சினைக்
　　கொடிய காகம் கொணர்ந்தது.
குஞ்சைப் பிரிந்த சிட்டுகள்,
　　பஞ்சு போலப் பறந்தன;
வீட்டைச் சுற்றி வந்தன;
　　கூட்டைச் சுற்றி வருந்தின;
சிறிது நேரம் சென்றது;
　　கருடன் ஒன்று வந்தது;
கரிய காகக் குஞ்சினைக்
　　கண்டு மகிழ்வு கொண்டது;
விரைந்து சரிவாய்ப் பறந்தது;
　　விசை யுடனே பாய்ந்தது;
கத்தக் கத்தக் கொன்றது;
　　கொத்திக் கொத்தித் தின்றது;
வல்லோ னுக்கு வல்லவன்,
　　வையத் திலே உண்டென்ற,
உண்மை, தனை உணர்வீரே;
　　ஒழுக்க மாக வாழ்வீரே!

—தானி. எ. தியாகஅரசு, பழனி.



# லீடர் மணி

**'ஆர்வி'**

மணி தன் நண்பர்களைப் பார்த்து, ''இவ்வளவு கேவலமான முறையில் தேர்தல் நடக்கும் என்று தெரிந்திருந்தால், நான் அபேக்ஷகராக நிற்கச் சம்மதித்திருக்கவே மாட்டேன்'' என்றான்.

''இதிலே கேவலம் என்னடா நடந்துவிட்டது? தோல்வி ஜுரத்தில் உளறுகிறாயே!'' என்று அந்தப் பக்கமாக வந்த பாலுவின் நண்பன் ஒருவன் மணியைப் பார்த்துப் பரிகாசம் செய்தான்.

''தோல்வியைக் கண்டு நான் அஞ்சவில்லை. நீங்கள்தான் நடுநடுங்கி, லஞ்சம் கொடுக்கிறீர்கள்!'' என்றான் மணி.

''அடேடே, 'சீச்சீ, பழம் புளிக்கும்' என்ற நரி மாதிரிப் பேசுகிறாயே! கௌரவமாக முன்னேயே விலகியிருக்கலாமே!'' என்றான் பாலுவின் நண்பன்.

தேர்தல் அன்று மாலையே ஓட்டுக்களை எண்ணத் தொடங்கினார்கள். பாலுவின் நண்பர்கள் மாலையும் கையுமாக வெளியே காத்து நின்றார்கள். முடிவு தெரிந்ததும் ஒரு சைக்கிள் ஊர்வலம் கிளம்ப வாடகை சைக்கிள்கள் பேசித் தயாராக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பள்ளிக்கூடமே திரண்டு கூடியிருந்தது. தலைமையாசிரியர் மேடைமீது ஏறி முடிவை வாசித்தார்: ''குழந்தைகளே! பெரிய பெரிய தேர்தல் எல்லாம் தலைகுனியும்படி தேர்தலில் கலந்து கொண்ட அருமை மாணவர்களே, மாணவிகளே! இந்த வருஷத்து லீடராக நீங்கள் பெருவாரியான ஓட்டுக்கள் கொடுத்துத் தேர்ந்தெடுத்திருக்கும் மணியை நான் பாராட்டி வாழ்த்துகிறேன்.''

அவருடைய முடிவு கணநேரம் இடிவிழுந்த அதிர்ச்சிபோல் திகைப்பாக இருந்தது. அனைவரும் அசையாமல் நின்றார்கள். அவர்கள் கோஷம் செய்வதற்கு முன்பாகவே தலைமையாசிரியர் மீண்டும், ''குழந்தைகளே! ஓட்டுகளின் விவரம் வருமாறு: ஆயிரத்து அறுநூறு ஓட்டுகள் மணிக்கு. நூற்றிப் பதினேழு ஓட்டுகள் அவனோடு போட்டி போட்ட பாலுவுக்கு! எட்டில் ஒரு பங்குக்கும் குறைவான ஓட்டுப் பெற்ற பாலு, வகுப்பு லீடர் பதவியையும் இழக்கிறான்'' என்று கூறி முடித்தபோது, மாணவ மாணவிகளின் பலத்த கரகோஷம் வானை முட்டியது. மணிக்கே தன் காதுகளை நம்ப முடியவில்லை. 'இது என்ன கனவா, நினைவா?' என்று அவன் திகைத்துப்போய் நின்றான்.

''லீடர் மணிக்கு!''

''ஜே!''

''வாடகை சைக்கிள்களுக்கு!''

''ஷேம்!''

''தோல்வி மாலைகளுக்கு!''

''டபிள் ஷேம்!''

''தோல்வி வீரர் பாலுவுக்கு!''

'அசுக்' என்று ஒரே ஒரு தும்மல் சத்தம்தான் கேட்டது. மற்றவர்கள் கேலியாகச் சிரித்தார்கள். பாலுவின் முகம் செவ செவ என்று ஆகிவிட்டது.

எல்லாரும் மணியைத் தலையில் தூக்கிகொண்டு ஓடினார்கள். ஒருவன் பாலுவுக்கு வந்த மாலையையே பிடுங்கி மணியின் கழுத்தில் போட்டான். ஒரே ரகளையும் ஆரவாரமுமாக இருந்தன.

''மணி-ஒரு விஷயம்! உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்; கிளம்பு!'' என்று யாரோ காதருகில் சொன்னார்கள்.

மணி திரும்பிப் பார்த்தான். குப்புசாமிதான் அவனைக் கூப்பிட்டுக்கொண் டிருந்தான். என்னமோ, ஏதோ என்று மணி உடனே அவன் பின்னால் கூட்டத்துக்குத் தெரியாமல் நழுவிச் செல்லலானான்.

மணி தன் வெற்றியைத் தானே எப்படிச் சொல்லுவது என்ற தயக்கத்துடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான். ஆனால் சந்துரு சந்தோஷத்தோடு புன்முறுவல் செய்து, ''கூச்சப்படாதே மணி. எனக்குத் தெரியும். குப்புசாமி சொல்லிவிட்டான். உன்னை லீடர் எலெக்ஷனுக்கு உன் இஷ்டம் இல்லாமலே வற்புறுத்தி உன் வகுப்பு மாணவர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். உனக்குச் சொல்லாமலே வெற்றியையும் தேடித் தந்துவிட்டார்கள்'' என்றான் சந்துரு.

''ஆமாம்'' என்று தலையை ஆட்டினான் மணி.

''எனக்கு இதைக் கேட்டதிலிருந்து எத்தனை சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா? ஹாஸ்டலில் நடந்த திருட்டுக்கும் உனக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிந்தபோது ஏற்பட்ட சந்தோஷத்தைவிடச் சந்தோஷமாக இருந்தது. பெருமையாகவும் இருந்தது'' என்றான் சந்துரு.

''ஹாஸ்டலில் நடந்த திருட்டா? ஓ! பாலுவின் பெட்டியை உடைத்து, திருடப்பட்டிருந்ததைத்தானே சொல்கிறாய்?''

''ஆமாம் மணி, ஆமாம். பாலர் கதிரில் உன் திருட்டுச் சரித்திரம் வரப் போகிறது என்று சொன்னார்களே, அதைத்தான் சொல்கிறேன்! அந்தத் திருட்டு அப்புறம் ரொம்ப நாள் கழித்துத்தான் அம்பலம் ஆயிற்று. அருணஜடை வீட்டில் இருந்தானே கங்கன், உன் பழைய விரோதி, அவன் வேலை அது. உன்மீது பழியைச் சுமத்தவே அந்தப் பயல் அந்த வேலை செய்திருக்கிறான். அப்புறம் குப்புசாமிதான் உதைத்து விஷயத்தை வெளிப்படுத்தினான். அந்த ஹாஸ்டல் பாலு உண்மை தெரிந்தும் உன்னைக் கேவலப்படுத்துவதற்காக இந்தப் பிரசாரம் செய்திருக்கிறான்!'' என்றான் சந்துரு.

மணிக்கு இந்த விஷயங்கள் எல்லாம் ஆச்சரியமாய் இருந்தது. மற்றொரு விதத்தில் பெருத்த ஆறுதலாகவும் இருந்தது. 'அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டான்.

''ஆமாம்; அந்தக் கங்கன் இப்போது எங்கே?'' என்றான் பிறகு.

''அவனா? பார்ஸ்டல் ஸ்கூலில் வாசம் செய்கிறான் இப்போது. திருட்டின் அவதாரம். நமக்குச் சாப்பாடு எப்படி அவசியமோ அதைப்போல அவனுக்குத் திருட்டுத் தொழில் அவசியம். திருடாவிட்டால் அவனால் வாழவே முடியாது. குப்புதான் அவனைப் பார்ஸ்டல் ஸ்கூலில் சேர்க்க முயற்சி எடுத்துக்கொண்டது; இனியாவது அவன் திருந்தவேண்டும்'' என்றான் சந்துரு.

''அவ்வளவு தூரம் நடந்திருக்கிறதா? எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே! நான்கூட பாலுவுக்கு எதிராக எலெக்ஷனுக்கு நிற்க யோசனை செய்தேன். ஹாஸ்டல் திருட்டை என்மீது சுமத்தி, கேவலமாகப் பிரசாரம் செய்து என்னை அவமானப்படுத்துகிறானே என்று பயந்தேன். இப்பொழுதுதான் எனக்குத் தெம்பு வந்தது. எல்லாம் உன்னால்தான்'' என்று மணி விடைபெற்றுத் திரும்பினான்.

சுமார் ஐந்து தப்படிகூட நடந்திருக்க மாட்டான். அதற்குள் சந்துரு, ''மணி! மணி!'' என்று கூப்பிட்டான்.



மணி திரும்பி அவன் கட்டிலண்டை வந்து உட்கார்ந்தான். பின்புறமிருந்து மறுபடியும் யாரோ, ''மணிதான்! நம்ப மணியேதான்!'' என்று ஓர் அம்மாள் உரத்த குரலில் யாரிடமோ சொல்லிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது.

மணியும் சந்துருவும் அந்தப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தார்கள். மணிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

நோயாளியின் கட்டிலில் அவனுடைய தந்தை படுத்திருந்தார். அவர்தான் எவ்வளவு பலஹீனமாகக் காணப்பட்டார்! பக்கத்தில் அவனுடைய சித்தி ஒரு ஸ்டூலில் அமர்ந்திருந்தாள். இருவரும் மணியையே ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இருட்டில் பளிச்சென்று நெளிந்த மின்னலைப்போல மணியின் கண்ணைப் பறித்தது அந்தக் காட்சி. அவன் மனத்திலே எத்தனையோ கேள்விகள் ஒரு நொடிக்குள் சரம்போல வந்து தைத்தன. அப்பாவா இது! சித்தியா இது! இவர்கள் இங்கே எங்கே வந்தார்கள், எப்படி வந்தார்கள், எப்போது வந்தார்கள், எதற்காக வந்தார்கள்? என்னைப் பார்க்கவா? அப்படியானால் அப்பா படுக்கையில் படுத்திருப்பானேன்? சித்தி பக்கத்தில் உட்கார்ந்திருப்பானேன்? என்பது போன்ற கேள்விகள் ஒரே சமயத்தில் ஒரு கொத்தாக வந்து அவனைத் தாக்கின.

அடுத்த கணமே அவனுக்கு அந்த அதிர்ச்சி விலகியது. ''அப்பா, சித்தி!'' என்று அந்த வார்டே அதிரும்படி கூவிக்கொண்டே, தாயைப் பிரிந்த கன்றுபோல் பாய்ந்து துள்ளி ஓடினான். அவர்கள் மூவரும் சந்தித்த அந்தக் காட்சியை வார்த்தைகளால் வர்ணிப்பதைவிட ஊகத்துக்கு விட்டுவிடுவதே பொருத்தமாகும். அவர்கள் மட்டும் தங்களை மறந்த நிலையில் இல்லை. அவர்களைக் கண்ட மற்ற நோயாளிகளும் அவர்களுடைய உறவினர்களும், ஆஸ்பத்திரி நர்ஸும்கூட அப்படியே தங்களை மறந்து அந்த மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எழுந்து மட்டும் நடக்க முடிந்திருந்தால் சந்துருவும் அவர்களுக்கு எதிரே போய் நின்றிருப்பான். பாவம், அவன் கட்டுகளை இன்னும் பிரிக்கவில்லை.

 J 11799

அன்று அல்லது மறுநாள்தான் பிரிக்க இருந்தார்கள்.

கால்மணி நேரம் போல மணியும் அவன் பெற்றேர்களும் குறிப்பாக இப்படித்தான் இருந்தார்கள் என்று சொல்லமுடியாது. அப்பா அவன் தலையைக் கோதிக் கொண்டே, ''மணி! மணி!'' என்று முனகினுர். சித்தியோ மணியின் கைகளை எடுத்து வைத்துக் கொண்டு கண்ணீரில் அவற்றை நனைத்தாள். மணிக்கு வியப்பும் சந்தோஷமும், ஏக்கமும் துக்கமும் ஒன்று சேர்ந்து கொண்டு அழுகையையே கிளப்பிவிட்டன.

அவனுடைய அப்பா இளைத்து உருமாறிப் போயிருந்தார். சித்தியோ கவலையினுலும் ஏக்கத்தினுலும் அடியோடு மனம் மாறிப் போயிருந்தாள்.

''நான் அநாதை யில்லை; எனக்கு அப்பா இருக்கிறுர், அம்மாகூட இருக்கிறுள்; இதோ அவர்கள் இருவரும் என் எதிரிலே, என் பக்கத்திலே இருக்கிறுர்கள்! நான் அநாதையல்ல?'' என்று மணி தனக்குள் சொல்லிக்கொண்டான்.

பக்கத்துப் படுக்கையிலிருந்த ஒரு பாட்டி, மணியின் சித்தியைப் பார்த்து, ''யாரம்மா இந்தக் குழந்தை! உன் பையனு?'' என்று விசாரித்தாள்.

சித்தி உடனே, ஆமாம்; என் பையன்தான்! என்றுள். அப்போது அவள் முகத்திலே காணப்பட்ட உண்மையான பெருமிதத்தைக் கண்டு மணிக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது.

அந்தப் பாட்டி மணியையும் அவன் சித்தியையும் வெகுநேரம் மாறிமாறிப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

இன்னும் அரைமணி நேரம்தான் இருந்தது. [illegible]களைத் தவிர ம[illegible]கள் [illegible]றிவிட [illegible]. ஆனல் [illegible]யின் [illegible]தை பக்கத்தில் அவனை உட்கா[illegible] வைத்துக் கொண்டு அவன் கரங்களைத் தம் கைகளில் எடுத்து வருடிய படியே படுத்திருந்தார்.

''நீங்கள் புறப்பட்ட அதே ரெயிலிலேயே நானும் சென்னைக்கு வந்துவிட்டேன். அதற்குப் பிறகு இதுவரையில் நடந்ததெல்லாம் பெரிய கதை'' என்றுன் மணி.

''அதே போலத்தான் எங்கள் கதையும்! காசிக்குப் போயும் கர்மம் தொலையாத கதை!'' என்றுள் அவனுடைய சித்தி.

காசி, பிரயாகை முதலிய இடங்களுக்குப் போய்விட்டு, பிருந்தாவனம் போகும்போது ஒரு துரதிருஷ்டமான சம்பவம் நடந்துவிட்டதாம். அவர்களுடைய பிரயாணச் செலவுக்காக வைத்திருந்த பணம் எல்லாம் ரெயிலில் திருட்டுப் போய்விட்டது. கடைசியில் சித்தியின் கைவளையல்களில் ஒன்றை விற்று அவர்கள் ஊர் திரும்பினுர்கள். ஆனல் வழியிலேயே மணியின் அப்பாவுக்கு வயிற்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது. சென்னை வருவதற்குள் அவருடைய நிலை அபாயகரமாகிவிட்டது. கூட வந்த பிரயாணிகள் சொன்ன யோசனையின் பேரில் அவரை உடனே ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தாள் சித்தி. பக்கத்தில் உள்ள ராமசாமி முதலியார் சத்திரத்தில் அவள் தங்கியிருந்தாள். கையில் இருந்த பணம் எல்லாம் இன்னும் இரண்டு நாள் செலவுக்குக்கூடக் காணுது. தெய்வம் விட்ட வழி ஆகிறது என்று இருந்த சமயத்தில்தான் அவர்கள் மணியைக் காண நேர்ந்தது. இந்த விவரங்களை யெல்லாம் சித்தி அவனுக்கு விவரமாக எடுத்துச் சொன்னுள். கண்களில் நீர் மல்க மணி இதையெல்லாம் கேட்டான்.

இதற்குள் மணி அடித்தாகிவிட்டது. எல்லாரும் வெளியில் போகவேண்டும். ''மறுபடி சாயங்காலம் வருகிறேம், அப்பா'' என்று சொல்லிவிட்டு மணி சித்தியை அழைத்துக் கொண்டு, சந்துருவிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியில் வந்தான்.

(தொடரும்)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN,

# கண்ணன்

## அதிருஷ்ட எண்கள் விளக்கம்

இதோ பக்கத்தில் ஒரு தொடர் எண் (Serial number) அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம் எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதே மாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். இந்த இதழுக்குரிய அதிருஷ்ட எண்கள் 15-12-55-ஆம் தேதி இதழில் பொருளடக்கத்திற்குப் பக்கத்தில் வெளியாகும். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

ஜெமினி இன்ஸானியத்தில் ஒரு காட்சி



(Regd. as a News paper in Ceylon.) Reg. No. M. [illegible]


வெளிவந்துவிட்டது!

புதிய கண்ணன் வெளியீடு

# சந்திரகிரிக் கோட்டை

கதைகளில் பலவிதம் உண்டு. அதுவும் நம் நாட்டில் உள்ள கதைகளுக்குக் கணக்கு வழக்கே கிடையாது. இன்றுங்கூட நம் நாட்டின் போக்கை ஒட்டிப் புதுப் புது மாதிரியான கதைகள் எழுதப்பட்டு வருகின்றன.

வீர உணர்ச்சியை வளர்த்து, வீரமும் தீரமும் பொருந்தியவர்களாக விளங்க வேண்டுமானுல் பல நாடுகளிலும் வாழ்ந்த வீரர்களுடைய வரலாற்றைக் கேட்கவேண்டும். அவர்களுடைய கதைகளைப் படிக்கவேண்டும்.

இந்தக் கதை சரித்திரக் கதை போன்ற ஒரு கர்[illegible]ரக் கதை. நம் நாட்டுச் சரித்திரப் போக்குக்கு ஏற்ற மு[illegible]யில் அமைந்து விளங்குகிறது. அமலனும் விமலனும் இரட்டையாகப் பிறந்த இரு ராஜகுமாரர்கள். யுத்தத்தில் காயமடைந்த தங்கள் மாமன் சந்திரகிரிக்கோட்டை மன்னனைக் காண வருகிறுர்கள். மன்னன் சந்திரவர்மன், இவ்விரு சகோதரர்களுக்கும் போட்டிகளை ஏற்படுத்தி இறுதியில் ஜயிப்பவருக்குத் தன் மகள் இந்துமதியையும் அரசாட்சியையும் சொடுக்கும்படி மந்திரி அருளேந்தியிடம் சொல்லி இறந்துவிடுகிறுன்.

இரு குமாரர்களும் போட்டிகளில் வீரதீரச் செயல்களையும் அரிய சாகஸங்களையும் புரிகின்றனர். இருவருக்கும் வெற்றி தோல்விகள் மாறி மாறிக் கிடைக்கின்றன. சமமான புத்தி சாதுரியமும் வீரமும் பொருந்திய இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க அரசகுமாரி இந்துமதியே மாறுவேஷத்தில் போட்டியில் கலந்துகொள்கிறுள். படிக்கப் படிக்கச் சலிக்காத அழகான நடை. மேலும் மேலும் ஆவலைத் தூண்டும் அடுக்கடுக்கான சம்பவங்கள். உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் சுவையான கதைப் போக்கு. ஆங்காங்கே அழகான படங்கள் நிறைந்தது.

ஆசிரியர்: 'ஜஙு'

140 பக்கங்கள். விலை ரூ. 1-4-0

மானேஜர், கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்.